# வணிகமஞ்சரி

ஜூன் - ஆகஸ்ட் 1988 JUNE - AUGUST 1988

வணிகப் புதினங்களையும் கருத்துக்களையும் தாங்கி வெளிவரும் திங்கள் இதழ்

வணிக அறிவியல் நிறுவன வெளியீடு

V. S. Sivakumaran.


- ★ வணிகச் செய்திகள்
- ★ இலங்கையின் பாரம்பரியமற்ற ஏற்றுமதிகள்
- ★ இலங்கையின் மரபு ரீதியற்ற ஏற்றுமதிகள் கொள்கைகளும் போக்குகளும்
- ★ இலங்கை வர்த்தக சம்மேளனம்
- ★ இலங்கையின் மாறிவரும் ஏற்றுமதி அமைப்பும் ஏற்றுமதி மேம்பாட்டுக்கென அரசாங்கம் வழங்கிவரும் ஊக்குவிப்புக்களும்
- ★ பிரசுரிக்கப்படுங் கணக்குகளில் வெளிப்படுத்தவேண்டிய தகவல்கள் பற்றிய ஒரு நோக்கு


# VANIHA MANCHARY

MONTHLY DIGEST OF BUSINESS NEWS & VIEWS
Published by Business Studies Institute

ரூபா 10/-

# VANIHA MANCHARY

Vol. 2 | JUNE 88 | No. 4


## MONTHLY DIGEST OF BUSINESS NEWS & VIEWS


*Publication :*

BUSINESS STUDIES INSTITUTE
MAHALAXMY,
AMMAN KOVIL WEST LANE,
SUTHUMALAI,
MANIPAY.



*Governor Members :*

- E. N. VARENDREN, Chartered Accountant.
- V. ARIYARATNAM, Chartered Accountant.
- S. RAJALINGAM, Marketing Consultant.
- V. S. SENTHILNATHAN, Attorney - at - Law.
- C. N. RATHAKRISHNAN, Area Sales Manager, Lanka Milk Foods (C.W.E.) Ltd.
- M. JEGATHEESAN, Tissa Toys.
- N. PERINPANATHAN, University Lecturer.
- M. SINNATHAMBY, Teacher.
- C. YOGESWARAN, Teacher.
- K. NANTHAKUMARAN, Management Accountant.
- J. RAJASINGAM, Business Agent.



*Editor:* K. KALVALAISEYON

*Price :* **Rs. 10-00**
Subscription for one year - Rs. 125-00
(with postal expenses)

*Printers :* MAHATHMA PRINTING WORKS,
EARLALAI.

## வணிக மஞ்சரி

**மலர் 2 ஜுன் - ஆகஸ்ட் 88 இதழ் 3**

வணிகச் செய்திகளையும்
கருத்துக்களையுந் தாங்கி வரும்
திங்கள் இதழ்.

வெளியீடு :

வணிக அறிவியல் நிறுவனம்,
'மஹாலக்ஷ்மி',
அம்மன் கோவில் மேற்கு ஒழுங்கை,
சுதுமலை,
மானிப்பாய்.

ஆட்சி உறுப்பினர் :

- இ. நி. வரேந்திரன்
  பட்டயக் கணக்கறிஞர்
- வே. அரியரத்தினம்
  பட்டயக் கணக்கறிஞர்
- சி. இராஜலிங்கம்
  சந்தைப்படுத்தல் ஆலோசகர்
- வை. ச. செந்தில்நாதன்
  சட்டத்தரணி
- C. N. ராதாகிருஷ்ணன்
  பிரதேச விற்பனை முகாமையாளர்
  லங்கா மில்க் பூட்ஸ் லிமிட்.
- மு. ஜெகநீசன்
  கைத்தொழிலதிபர்
- ந. பேரின்பநாதன்
  பல்கலைக் கழக விரிவுரையாளர்
- மா. சின்னத்தம்பி
  வலய ஆசிரிய ஆலோசகர்
- சி. யோகேஸ்வரன்
  ஆசிரியர்
- க. நந்தகுமார்
  முகாமைத்துவக் கணக்கறிஞர்
- ஜெ. இராஜசிங்கம்
  சந்தைப்படுத்தல் முகவர்

இதழாசிரியர் :

கு. கல்வளை சேயோன்

விலை :

தனிப்பிரதி : ரூபா 10-00
ஆண்டுச் சந்தா : ரூபா 125-00
[தபாற் செலவு உட்பட]

அச்சுப்பதிவு :

மஹாத்மா அச்சகம்,
ஏழாலை.


## சிந்தனை

வணிக மஞ்சரியின் இரண்டாம் மலரின் மூன்றும் இதழைத் தங்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம். இம் மலர் ஏற்றுமதிச் சிறப்பிதழாக மலர்கின்றது. முன்னைய அரசாங்கம் கைக்கொண்ட உள்நோக்கிய பொருளாதாரக் கொள்கைகளை மாற்றியமைத்துத் தற்போதைய அரசாங்கம் வெளிநோக்கிய கொள்கைகளை அறிமுகஞ் செய்தது. இதன் விளைவாக இறக்குமதிப் பிரதியீட்டுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் ஏற்றுமதி அதிகரிப்புக்கு வழங்கப்படலாயிற்று. அதாவது மூலதனச் செறிவுள்ள கைத்தொழில்கட்குப் பதிலாக ஊழியச் செறிவு மிக்க கைத்தொழில்கள் ஊக்குவிக்கப்பட்டன. இதன் விளைவாக ஏற்றுமதி வருவாய் அதிகரித்துள்ளதென்றும், ஏற்றுமதி அமைப்பு மாற்றத்துக்குள்ளாகி இருக்கின்றதென்றும் வாதிடப்படுகின்றது. மறுபுறத்தில் அந்நியச் செலாவணிச் சம்பாத்தியம் போதிய அளவு அதிகரிக்கவில்லை எனவும் எடுத்துக் காட்டப்படுகின்றது. இவற்றைச் சீர்தூக்கி ஆராயும் இரு கட்டுரைகள் இவ்விதழில் சிறப்புக் கட்டுரைகளாக இடம் பெறுகின்றன, மேலும் மரபு வழியற்ற பல புதிய பொருட்கள் தற்போது ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மனித முடி முதல் கணனி மென் பொருட்கள் வரையிலான இத்தகைய பொருட்கள் பற்றிய விவரணக் கட்டுரையும் இவ்விதழை அலங்கரிக்கின்றது.

வணிகச் செய்திகள் இந்த இதழில் துறைவாரியாக வகுக்கப்பட்டு, நிரற்படுத்தப்பட்டு அளிக்கப்பட்டுள்ளன. வணிகவியலின் பல்வேறு அம்சங்களையுஞ் சார்ந்த செய்திகள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

பிரசுரிக்கப்படுங் கணக்குகளில் வெளியிடப்பட வேண்டிய தகவல்களை விளக்குங் கட்டுரை ஒன்றும் இடம்பெறுகின்றது. அடுத்து வரும் இதழ்களில் இலாப நட்டக் கணக்குகள், ஐந்தொகைகள், காசோட்டக் கூற்றுகள் ஆகியவற்றைப் பிரசுரிக்கும்போது உள்ளடக்க வேண்டிய தகவல்கள் பற்றி விளக்கப்படும்.

வணிக மஞ்சரி நாடளாவிய வாசகர் குழாத்தைத் தற்போது பெற்றுவிட்டது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் வதியும் எமது வாசகர்கள் பல்வேறு விடயங்களை எதிர்பார்க்கின்றனர். அத்துடன் தத்தமது தராதரங்களுக்கு இணங்க வணிக மஞ்சரியின் தரம் அமைந்திருக்க வேண்டுமெனவுங் கோரி வருகின்றனர். ஆக்கபூர்வமான ஆலோசனைகளை நாம் என்றும் வரவேற்கின்றோம். எமது குறிக்கோளுக்கு உட்பட்ட விதத்தில் அவற்றைச் செயற்படுத்தவும் தயாராக உள்ளோம். ஆனால் வெறுமனே பாடக் குறிப்புகளைப் பிரசுரிக்குஞ் சஞ்சிகையாகத் தன்னை வணிக மஞ்சரி தாழ்த்திக் கொள்வதை எமது வாசகர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என உறுதியாக நம்புகின்றோம். தரத்தைக் குறைப்பதன் மூலம் வாசகர் குழாத்தைப் பெருக்குவது வணிகவியல் மாணவரின் நீண்டகால நலன்கட்குக் குந்தகமானது என்பதை நாம் மறந்து விடலாகாது. இவ் விடயத்தில் வாசகர்களின் கருத்தை நாடி நிற்கின்றோம்.

# வணிகச் செய்திகள்

## வங்கியியல்

### வங்கிச் சேவைகளின் புதிய பரிமாணம்

1977இன் பின்னர் வெகுவாக வளர்ச்சி பெற்ற துறை சேவைகள் துறையாகும். இவற்றுள் வங்கிச் சேவைகளும் அடங்கும். வங்கித் துறையில் ஏறத்தாழ நிறைபோட்டி நிலை ஏற்பட்டுள்ளமையால் வாடிக்கையாளருக்கு வழங்கும் சேவைகளை விஸ்தரிப்பதன் மூலம் ஒவ்வொரு வங்கியுந் தனது சந்தைப் பங்கினைப் பேண வேண்டிய அவசியம் நேர்ந்துள்ளது.

ஆரம்பத்தில் பகுதி பகுதியாக ஆரம்பிக்கப்பட்ட கணனி மயமாக்குஞ் செயற்பாடு விரைவில் வெகுவாக முன்னேற்றங் கண்டது. தற்போது தலைநகரில் உள்ள அனைத்து வங்கிகளும் கணனி மயப்படுத்தப்பட்டன. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 'சம்பத் வங்கி', 'சேலான் நம்பிக்கை' என்பவை ஆரம்ப முதலே பூரண கணனி மயப்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கின. இலங்கை வங்கியின் புதிய தலைமைக் காரியாலயம் முற்றிலும் கணனி மயப்பட்டதாகும். தற்போது மக்கள் வங்கியும் இலங்கை வங்கியும் தமது கொழும்புக் கிளைகளில் கணனி மயமான சேவைகளை வழங்கி வருகின்றன.

ஹொங்கொங் அன்ட் ஷாங்காய் வங்கி முதன் முதலாக 1986இல் ஒரு தன்னியக்க ரெலர் (Teller) பொறியை நிறுவியது. பொறி மயப்படுத்தப்பட்ட வங்கியியலின் முகப்படியாக இது அமைந்தது. தற்போது இலங்கை வங்கியும் இத்தகைய ஒரு பொறியை நிறுவியுள்ளது.

வங்கிகள் அறிமுகஞ் செய்துள்ள நவீன சேவைக் கருவி காசோலைகளை வேறிடங்களில் மாற்றுவதற்கு உதவும் அட்டைகளாகும் (Cheque Cards). அடிப்படையில் இவை ஒரு அறிமுக அட்டைகளே. ஆனால் ஒவ்வொரு வங்கியும் தனித்தன்மை கொண்ட வெவ்வேறு வகை அட்டைகளை அறிமுகஞ் செய்துள்ளன. ஆரம்ப காலம் முதல் இலங்கையிலுள்ள வங்கிகள், பிறநாட்டு வங்கிகளின் சேவைக் கருவிகளான கொடுகடன் அட்டைகளைச் (Credit Cards) சந்தைப்படுத்தி வந்துள்ளன. விசா (Visa), மாஸ்டர் (Master) பார்க்லேகாட் (Barclaycard), ஜப்பான் கிறெடிற் பீரு (Japan Credit Bureau) போன்ற கருவிகள் இவ்வாறு சந்தைப்படுத்தப்பட்டன. ஆனால் இக் கருவிகள் பிற நாட்டினருக்கே பயன்தர வல்லன.

உள்நாட்டினருக்குப் பயன் தரக்கூடியதாக இம் முறை அண்மைக் காலத்தில் மாற்றியமைக்கப்பட்டது. முதன் முதலில் சம்பத் வங்கி சம்பத் அட்டையை அறிமுகஞ் செய்தது. பின்னர் சேலான் நம்பிக்கை வங்கி கோல்டன் (Golden) அட்டையையும், கோல்டன் கீ (Golden Key) அட்டையையும் வெளியிட்டது அதனைத் தொடர்ந்து இலங்கை வங்கி காசோலை உத்தரவாத அட்டையையும் (Cheque Guarantee Card), சொந்த வங்கியியல் அட்டையையும் (Personal Banking Card) அறிமுகஞ் செய்துள்ளது. அட்டன் தேசிய வங்கி காசோலையைப் பணமாக மாற்ற உதவும் அட்டை (Cheque Encashment Card) யையும், நீலவண்ண அட்டை (Blue CEC) ஒன்றையும் அறிமுகஞ் செய்துள்ளது.

காசோலை உத்தரவாத அட்டையைப் பயன்படுத்தி வெளியாருடனான கொடுக்கல் வாங்கல்களைக் காசோலை மூலம் மேற்கொள்ளலாம். இந்த அட்டையின் உடைமையாளர் பிறப்பிக்கும் குறிப்பிட்ட தொகைக்கு உட்பட்ட காசோலைகட்குத் தாம் பணஞ் செலுத்துவோமென வங்கி உத்தரவாதம் வழங்குகின்றது. விருந்தினர் விடுதிகள் (Hotels), பல்பொருள் அங்காடிகள் (Super Markets), மருத்துவ மனைகள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் என்பவை இவற்றை ஏற்று வங்கியின் வாடிக்கையாளரின் காசோலைகளைப் பெற்றுக்கொண்டு அவர்கட்குப் பொருட்களையுஞ் சேவைகளையும் வழங்கும். சொந்த வங்கியியல் அட்டை கொண்டுள்ளோர் வங்கி மூடப்பட்ட பின்னரும் 'ரெலர்' (Teller) பொறியினைப் பயன்படுத்தித் தமது காசோலைகளைப் பணமாக மாற்றிக்கொள்ளலாம்.

காசோலையைப் பணமாக மாற்றும் அட்டை சில தகைமை கொண்டோருக்கு மட்டுமே வழங்கப்படும். இவர்கள் அட்டன் தேசிய வங்கியின் எக் கிளையிலாவது ரூபா 5,000/-க்கு உட்பட்ட காசோலைகளைப் பணமாக மாற்றிக்கொள்ளலாம். குறைந்த தகைமை கொண்டோருக்கு உதவும் வண்ணம் 'நீல அட்டை' அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது. இவர்கள் ரூபா 2,000/-க்குட்பட்ட காசோலைகளை மாற்றிக்கொள்ள முடிகின்றது.

மக்கள் வங்கியும் இதனை ஒத்த ஒரு திட்டத்தினை வகுத்துள்ளது. 'ஓபின்' (Open - Obtain Payment from Entire Net-work) என்ற இம் முறையின் கீழ் நடைமுறைக் கணக்கு அல்லது சேமிப்புக் கணக்கொன்றினைக் கொண்டுள்ள ஏவரும் வங்கியின் எக்

கிளையிலும் ரூபா 1,000/-க்குட்பட்ட தொகையைப் பணமாகப் பெறலாம். நேரடித் தொலைபேசி வசதி கொண்ட கிளைகளில் மட்டுமே இவ் வசதி உள்ளது. சேமிப்புக் கணக்குகளைப் பொறுத்தவரை கரிய ஒளி முறை (Black Light System) என்பதன் கீழ் தமது ஒப்பங்களைப் பதிவு செய்தவர்கள் மட்டுமே இத் திட்டத்தால் பயன் பெற முடியும்.

காசு பயன்படுத்தப்படாத வங்கியியலை (Cash-less Bankine) நோக்கிய முதற் படியாக இக் கருவிகள் அமைகின்றன.

### மக்கள் வியாபார வங்கி

வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுடன் கூட்டு முயற்சியாக ஆரம்பிக்கப்பட்ட முதலாவது வங்கி மக்கள் வியாபார வங்கி (People's Merchant Bank) ஆகும். இவ் வங்கியின் வெளிநாட்டுக் கூட்டு முனைவரான கின்னஸ் மஹோன் அன்ட் கம்பனி லிமிட்டட் (Guinness Mahon and Co. Ltd) அண்மையில் விலகிவிடவே இவ் வங்கி மக்கள் வங்கியின் பூரண உடைமையான நிறுவனமாகச் செயற்பட்டு வருகின்றது. 5 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்ட மூலதனத்துடன் 1983இல் ஆரம்பிக்கப்பட்ட இவ் வங்கி இது வரை நட்டத்திலேயே செயற்பட்டு வந்தது. 1987/88இல் முதன் முறையாக இவ் வங்கி ரூபா 1.5 மில்லியன் இலாபம் ஈட்டியுள்ளது.

திட்ட மேம்பாடு, ஆலோசனை வழங்கல், நிதி ஒழுங்கு செய்தல் (Found Negotiation) என்ற மரபு ரீதியான வியாபார வங்கிப் பணிகளுடன் உண்டியல்களைக் கழிவுடன் மாற்றுதல், வர்த்தகத் தாள்களைக் (trade paper) கையாளல், கடன்களைத் திரட்டி வழங்கல் (Loan Sydication), படுகடன்களை அறவிடுதல் (Debt Collection), குத்தகைக்கு விடுதல், காப்புறுதி, நலிவுற்ற தொழில்களைச் சீராக்கல், ஏற்றுமதி மேம்பாடு, இடைநிலை நிதியீட்டப் பணிகள் (Financial Intermediary Services) நிதி ஆலோசனைச் சேவைகள் என்பவற்றையும் இவ் வங்கி மேற்கொண்டு வருகின்றது. ஏனைய வியாபார வங்கிப் பணிகளில் ஈடுபடவுந் திட்டமிட்டுள்ளது.

## நிதி

### நிதிக் கம்பனிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்துக்குத் திருத்தம்

1979ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் கட்டுப்பாட்டுச் சட்டம் இடை நிலை நிதிச் சந்தை (Secondary Financial Market) நிறுவனங்களுட் தலையாய நிதிக் கம்பனிகளின் செயற்பாடுகளை ஒழுங்கு படுத்தும் நோக்கத்துடன் இயற்றப்பட்டது. இச் சட்டம் மத்திய வங்கியின் நாணயச் சபைக்குப் பரந்த அதிகாரங்களை வழங்கியுள்ளது. எனினும் பயனுறுதியுள்ள விளைவுகளை ஏற்படுத்தும் வகையில் நிதிக் கம்பனிகளை நெறிப்படுத்துவதற்கு இந்த அதிகாரங்கள் போதாமல் உள்ளமை பற்றி மத்திய வங்கி தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டி வந்துள்ளது. சிறிய நிதிக் கம்பனிகள் மட்டுமின்றி இடைத்தர அளவுள்ள கம்பனிகளும் அண்மையில் நெருக்கடிகளுக்கு உள்ளாகின. ஹேராம் பினான்ஸ் லிட்., யூனியன் டிரஸ்ட் அன்ட் இன்வெஸ்மென்ட்ஸ் லிட்., ஹிடேஹி பினான்ஸ், காசில் பினான்ஸ் என்பவையே இத்தகைய கம்பனிகளாகும்.

பொது மக்கள் நிதிக் கம்பனிகளில் தமது சேமிப்புகளை வைப்பாக இட்டு வருவதனால் அவற்றின் செயற்பாடுகள் பொது முக்கியத்துவம் பெறுகின்றன. எனவே அவசரகால அதிகாரங்களைப் பயன்படுத்தி 1988 ஜூன் 16ஆம் திகதி கொண்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் மத்திய வங்கிக்குப் பரந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றின்படி கம்பனிகளின் முகாமையை மத்திய வங்கி பொறுப்பேற்கலாம். கம்பனிகளின் இயக்குனர் சபைக்கு இயக்குனர்களை நியமிக்கலாம். கம்பனிகளைக் குலைக்கவும் அது நடவடிக்கை மேற்கொள்ளலாம். கம்பனிகளின் சொத்துக்களைப் பொறுப்பேற்கலாம். சொத்து விபரங்களை வெளியிடுமாறு இயக்குனர்களைப் பணிக்கலாம்.

பதிவு பெற்ற கம்பனிகள்; சட்டத்துக்கு இணங்க, ஆண்டுதோறும் தமது கணக்குகளை மத்திய வங்கிக்குச் சமர்ப்பித்து வருகின்றன. ஆனால் சோடனை செய்த (Window Dressed) கணக்குகளும் இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. கணக்காய்வின் பின்பும் உண்மைக்குப் புறம்பான விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன. இதனால் கணக்காய்வாளரையும் கண்காணிக்க வேண்டியது அவசியமாகியுள்ளது.

இவை அனைவற்றையுஞ் சமாளிக்கும் விதத்தில் திருத்தச் சட்டம் ஒன்றினை இயற்றுவதற்கான நகலை மத்திய வங்கி தயாரித்துள்ளது. 71 கம்பனிகள் பதிவுபெற்றுள்ள போதிலும் நிதிக் கம்பனிகளில் இடப்பட்டுள்ள மொத்த வைப்புகளில் 90 சத வீதமானவை 14 கம்பனிகளிலேயே இடப்பட்டுள்ளமையால் பெரிய கம்பனிகளையும் கண்காணித்தல் அவசியமாகியுள்ளது.

### நிதிக் கம்பனிகளில் இடும் வைப்புகட்கு உயர்ந்த வட்டி

நிதிக் கம்பனிகள் தாம் ஏற்கும் வைப்புகட்கு முதிர்ச்சிக் காலத்தைப் பொறுத்து 17 - 18 சத வீதத்துக்கு உட்பட்ட வட்டியையே வழங்க வேண்டுமென டிசம்பர் மாதத்தில் மத்திய வங்கி பணித்திருந்தது.

இது மிகவுங் குறைந்த வீதமெனக் கருத்து வெளியிடப்பட்டமையால் முதிர்ச்சிக் கால வேறுபாடின்றி 20 சத விதம் வரை வட்டி வழங்கலாமென மத்திய வங்கி அனுமதித்தது. தற்போது இரண்டு வருடங்கட்கு உட்பட்ட வைப்புகட்கு 21 சத வீதமும் அதற்கு மேற்பட்டவற்றுக்கு 24 சத வீதமும் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

## காப்புறுதி

### யூனியன் அஷ்யூரன்ஸ்

யூனியன் அஷ்யூரன்ஸ் லிற். (Union Assurance Ltd.) என்ற தனியார் துறைக் காப்புறுதிக் கம்பனி ரூபா 20 மில்லியன் பெறுமானங் கொண்ட பங்குகளைப் பொதுமக்களுக்கு வழங்கியுள்ளது. ஒவ்வொன்றும் ரூபா 10/- பெறுமானங் கொண்ட இரண்டு மில்லியன் பங்குகள் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன. இக் கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூபா 200 மில்லியனாகும். இதில் ரூபா 35 மில்லியன் பெறுமானமுள்ள பங்குகளை நான்கு பெருங் கம்பனிகள் உடைமை கொண்டுள்ளன. அவையாவன:—

1. எயிற்கின் ஸ்பென்ஸ் அன்ட் கம்பனி லிற். (Aitken Spence & Co. Ltd.)
2. கார்சன் கர்பர்பட்ச் அன் கம்பனி லிற். (Carson Cumberbatch & Co. Ltd.)
3. மேர்க்கன்டைல் கிறடிற் லிற். (Mercantile Credit Ltd.)
4. விற்றேல் பவுஸ்டட் லிற். (Whittal Boustead Ltd.)

இலங்கை வங்கிக்கு முற்றிலுஞ் சொந்தமான இலங்கை வியாபார வங்கி (Merchant Bank of Sri Lanka) இக் கம்பனியில் ரூபா 15 மில்லியன் முதலீடு செய்துள்ளது. தனியார் முதலீட்டாளர் ஒரு குழுவாகச் சேர்ந்து ரூபா 5 மில்லியன் முதலிட்டுள்ளனர். தனியார் துறை முதலீடுகளிற் பங்கு கொள்ளும் உலக வங்கியின் இணை நிறுவனமான சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (International Finance Corporation) இக் கம்பனியில் ரூபா 15 மில்லியன் முதலீடு செய்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி ரூபா 10 மில்லியன் முதலீடு செய்துள்ளது. இந் நிலையில், இக் கம்பனி வழங்கப்பட்ட மூலதனமாக ரூபா 100 மில்லியன் அமைந்திருக்கும். இக் கம்பனி கொழும்பு பிணையங்கள் மாற்றகத்தின் (Colombo Securities Exchange) விலைக் குறிப்புப் (Quotation) பெற்றதாகும். இவ் விலைக் குறிப்பைப் பெற்றுக் கொள்வதற்கும், இலங்கையின் மூலதனச் சந்தையில் நெருக்கமாகப் பங்கு கொள்வதற்குமாகவே இக் கம்பனி பொதுப் பங்கு வழங்கலை (Public Issue) மேற்கொண்டுள்ளது. கம்பனியின் மூலதன அடித் தளத்தை விரிவுபடுத்தலும், கம்பனியின் ஒப்புரவில் (Equity) பங்குகொள்ளப் பொது மக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குவதும் பொதுப் பங்கு வழங்கலின் மேலதிக குறிக்கோளாகும். இலங்கை வியாபார வங்கியின் தலைமையின் கீழ் நிதி நிறுவனங்களின் குழுவொன்று இப் பொது வழங்கலுக்குப் பொறுப்புத்தரவாதம் (Underwrite) வழங்கியுள்ளன. அக் குழுவில் தேசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகிய பொதுத்துறை நிறுவனங்களுடன் (f) போர்ப்ஸ் நிதியியல் சேவைகள் தனி லிற். (Forbes Financial Services ([Pvt.] Ltd.) என்ற தனியார் நிறுவனமும் அடங்குகின்றன.

கொழும்புப் பிணையங்கள் மாற்றகத்தின் விலைக் குறிப்புப் பெற்றுள்ளதால் இக் கம்பனி குறைவான வீத வரி மட்டும் செலுத்த வேண்டிய தகைமையைப் பெற்றுள்ளது.

இக் கம்பனி ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த கொமர்ஷியல் யூனியன் அஷ்யூரன்ஸ் கம்பனி (Commericial Union Assurance Co-Plc) என்ற நிறுவனத்துடன் தொழினுட்பச் சேவை உடன்பாடொன்றைச் செய்துள்ளது. எண்பது நாடுகளிற் கிளைகளையும், முகவராண்மை நிலையங்களையும் (Agencies), இணை நிறுவனங்களையும், சேய் நிறுவனங்களையும் கொண்ட பின்னைய நிறுவனம் உலகின் மிகப் பெரிய காப்புறுதிக் கம்பனிகளுள் ஒன்றாகும். பொதுக் காப்புறுதித் தொழில் தொடர்பாகவே இந்த உடன்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

### சி. ரி. சி. ஈகிள்

பெப்ருவரி மாதம் முதல் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் மற்றுமொரு தனியார் துறைக் காப்புறுதி நிறுவனம் சி. ரி. சி. ஈகிள் காப்புறுதிக் கம்பனி லிமிட்டட். பொதுக் காப்புறுதித் தொழிலையும், ஆயுட் காப்புறுதித் தொழிலையும் ஒருங்கே மேற்கொண்டு வருகின்றது. இக் கம்பனியின் பங்கு மூலதனம் ரூபா 100 மில்லியனாகும். இதில் ரூபா 80 மில்லியன் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டது. இக் கம்பனியின் பங்குகளில் இலங்கை புகையிலைக் கம்பனி (Ceylon Tobacco Co Ltd.) 55 சத விதமும், மூலதன அபிவிருத்தி முதலீட்டுக் கம்பனி 15 சத விதமும், ஜேம்ஸ் பின்லே என்ற நிறுவனம் 5 விதமும், இலங்கை வர்த்தக வங்கி 5 சத விதமும் முதலீடு செய்துள்ளன. தற்போது இக் கம்பனி ரூபா 20 மில்லியன் பெறுமானங் கொண்ட பங்குகளைப் பொது மக்களுக்கு வழங்க முன்வந்துள்ளது. பரந்த பங்குத் தளத்தை

ஏற்படுத்து முகமாக இலங்கை வர்த்தக வங்கியின் கிளைகள், இலங்கை புகையிலைக் கம்பனி விநியோகத்தர்கள் என்பவர்களூடாகப் பங்கு விநியோகஞ் செய்ய இக் கம்பனி முன்வந்துள்ளது இப் பங்கு வழங்கலுக்கு இலங்கைப புகையிலைக் கம்பனி பொறுப்புத்தரவாதம் வழங்க முன்வந்துள்ளது.

## போக்குவரத்து

### கப்பற் கடடணங்கள்

இலங்கைக் கப்பற் கூட்டுத்தாபனம் விரைவில் தனது கப்பற் கட்டணத்தை அதிகரிக்கக் கூடுமென அறிவிக்கப்பட்டுள்ளது. 1980இன் பின்னர் இக் கூட்டுத்தாபனம் கட்டணங்களை அதிகரிக்கவில்லை. இக் காலப் பகுதியில் வாடகைக் (Charter) கப்பற் கட்டணம் இரண்டு முதல் நான்கு மடங்காக அதிகரித்துள்ளது. சூயஸ் கால்வாயைப் பயன்படுத்துவதற்கான கட்டணமும் 30 சத வீதத்துக்கு மேல் அதிகரித்துள்ளது கொள்கலன் கையாளற் கட்டணமும் அதிகரித்துள்ளது. இந்த எட்டாண்டு காலப், புகுதியில் ஏற்பட்ட அதிகரிப்பு 80 முதல் 100 சத வீதமானது என மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் கப்பற் கூட்டுத்தாபனம் பல்வேறு வகைப் பொருட்களின் ஏற்றுமதியை மேம்படுத்தும் நோக்கில் அவற்றுக்குச் சலுகை அடிப்படையிலான கட்டணங்களையே விதித்து வந்துள்ளது. இந் நிலையில் கப்பற் கட்டண அதிகரிப்புத் தவிர்க்க முடியாததாகி உள்ளது.

### எயர் லங்கா நிறுவனம்

ஆரம்ப கால முதல் எயர் லங்கா நிறுவனம் நட்டத்திலேயே தொழிற்பட்டு வந்துள்ளது. ஆனுல் அதன் நட்டத்தின் பரிமாணம் குறைவடைந்து வந்துள்ளது 1985/86இல் 1,577 மில்லியன் ரூபா நட்டம் ஈட்டிய இந் நிறுவனம் 1986/87இல் 693 மில்லியன் ரூபாவும், 1987/88இல் 353 மில்லியன் ரூபாவும் நட்டம் ஈட்டியுள்ளது 1989/90இல் இந் நிறுவனம் இலாபத்தில் இயங்கக் கூடுமென்றும் 1990/91 முதல் அரசாங்கத்தின் நிதி ஆதரவு இந் நிறுவனத்துக்குத் தேவைப்படாது என்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

### மலிவுக் கட்டணத்தில் விமானப் பயணம்

எயர் லங்கா நிறுவனமும் ரீ. டபிள்யூ. ஏ. (TWA) நிறுவனமும் கூட்டாக மலிவு விமானக் கட்டணத் திட்டம் ஒன்றினை அறிவித்துள்ளன. இலங்கையிலிருந்து எயர் லங்கா விமானங்களில் ஐரோப்பிய நகரங்கட்கும் பின்னர் அங்கிருந்து ரி. டபிள்யூ. ஏ. விமானங்களில் அமெரிக்காவுக்கும் பயணஞ் செய்வோர் இத் திட்டத்தால் நன்மை பெறுவர். சர்வதேச விமானப் போக்குவரத்துக் கழகத்தால் (IATA) நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட 30 சத வீதம் மலிவான கட்டணத்தைச் செலுத்தி இப் பயணத்தை மேற்கொள்ளப் புதிய திட்டம் வாய்ப்பளிக்கின்றது.

### கூட்டுத்தாபனக் கப்பல்களில் இட ஒதுக்கீடு

இறக்குமதிப் பொருட்களை நாட்டினுட் கொண்டுவர அரசாங்கம் கப்பற் கூட்டுத்தாபனத்தின் கப்பல்களையே பெருமளவுக்குப் பயன்படுத்துகின்றது. அக் கப்பல்களில் இட ஒதுக்கீடு செய்து கொள்கின்றது. இதனுல் கூட்டுத்தாபனமும் இலாபத்திற் செயற்பட முடிகின்றது. கப்பற்படுத்தலில் உலகளாவிய தேக்க நிலை காணப்படுவதனுலும், கப்பல் நிறுவனங்களின் நலன்களைக் காக்கப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதனுலும் அரசாங்கம் இட ஒதுக்கீடு செய்ய வேண்டியது மேலும் அவசியமாகின்றது. காப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் வளர்ச்சி பெற்ற நாடுகள் முன்னணி வகிக்கின்றன. அமெரிக்காவும் ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளும் கப்பல்களைக் கட்டுவதற்கும், தொழிற்படுத்துவதற்கும் மானியங்களை வழங்குகின்றன. அத்துடன் சட்ட முறையான காப்பீடுகளும் வழங்குகின்றன. குறிப்பாக அரசாங்கச் சரக்குகள் தேசிய கப்பற் தொகுதியில் மட்டுமே எடுத்துச் செல்லப்பட வேண்டுமென பிரான்சில் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

## உல்லாசப் பயணத் துறை

### பயணிகள் விடுதிகள்

இலங்கையில் அமைக்கப்பட்ட முதல் ஐந்து நட்சத்திர பயணிகள் விடுதி ஹோட்டல் சிலோன் இன்ரர் கொன்ரினன்டல் (Hotel Ceylon Inter-Continental) ஆகும். இதில் 250 விருந்தினர் அறைகள் உள்ளன. இலங்கையிலுள்ள மிகப்பெரிய பயணிகள் விடுதி லங்கா ஒபரோய் (Lanka Oberoi) ஆகும். 520 விருந்தினர் அறைகளைக் கொண்டது இவ் விடுதி. இலங்கையின் மிகப் பழைய உல்லாசப் பயணிகள் விடுதி ஹோட்டல் தப்ரபேன் (Hotel Taprobane) ஆகும். கொழும்பு மாநகரிலுள்ள ஏழு முன்னணி பயணிகள் விடுதிகளில் 2526 விருந்தினர் அறைகள் காணப்படுகின்றன.

### பிரச்சாரம்

உல்லாசப் பயணிகட்குத் தேவையான தகவல்கள் தற்போது சர்வதேச தரத்தில் அமைந்த சஞ்சிகை ஒன்றின் மூலம் வெளியிடப்பட்டு வருகின்றன. எக்ஸ்பிளோரர் ஸ்ரீலங்கா (Explore Sri Lanka) என்ற இச் சஞ்சிகை ஹொங்கொங்கிலுள்ள கொன்டினென்

டல் ரிசோர்ட்ஸ் லிற். (Continental Resorts Ltd.) என்ற நிறுவனத்தால் வெளியிடப்பட்டு வருகின்றது. உல்லாசப் பயணிகட்குத் தேவையான பல விதமான தகவல்களை உள்ளடக்கிய இச் சஞ்சிகை கடந்த இரண்டு ஆண்டுகளாக வெளியிடப்படுகின்றது.

#### கேளிக்கைகள்

பயணிகள் உல்லாசமாகப் பொழுது போக்கு வதற்காகப் பல்வேறு கேளிக்கைகள் ஒழுங்கு செய் யப்பட்டுள்ளன. ஐந்து நட்சத்திர விடுதிகளிலும், தனியாராலும் 'கசினோ' (Casino) என அழைக்கப் படும் சூதாட்ட நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றன. மாலைப் பொழுதை இனிதே கழிக்க 'இரவில் கொழும்பு (Colombo by Night) என்ற நிகழ்ச்சி நடாத்தப்படுகின்றது. இலங்கை பற்றிய அறிவைப் பரப்பும் துண்டுப் படக் காட்சி (Slide Presentation) கலாச்சார நிகழ்ச்சிகள், டிஸ்கோ நடனம் (Disco Dancing) ஆகியவற்றுடன் இரவு உணவையும் ஒரு தொகுதியாக வரையறுத்த கட்டணத்துக்கு வழங்கி வருகின்றனர். எக்ஸ்பிளோர் ஸ்ரீலங்கா சஞ்சிகை நடாத்தும் இந் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கு 10 அமெரிக்க டொலர் கட்டணமாக விதிக்கப்படு கின்றது. இவ்வாறு கலந்து கொள்பவர்களுக்கு 20 டொலர் பெறுமானமுள்ள 'கசினோ' கூப்பன்கள் இலவசமாக வழங்கப்பட்டும் வருகின்றன.

#### தரவுகள்

1978ஆம் ஆண்டின் பின்னர் பயணிகள் வருகை மிக அதிகமாகக் குறைவடைந்த ஆண்டாக 1978 காணப்பட்டது. இவ்வாண்டில் நாட்டுக்குள் வந்த பயணிகளின் எண்ணிக்கை 182,620 ஆகும். 1986இல் 230,106 பயணிகள் வந்திருந்தனர். உல்லாசப் பயணிகள் மிக அதிகமாக வருகை தந்த ஆண்டு 1982 ஆகும். இவ்வாண்டில் 407,230 பயணிகள் நாட்டினுள் வந்தனர்.

பயணிகள் செலவிட்ட இரவுகளின் எண்ணிக்கை 2,417,000 ஆக அமைந்தது. இது 1986ஐ விட 61.4 சத வீதம் குறைவானதாகும்.

உல்லாசப் பயணிகளால் பெறப்பட்ட மொத்த வருமானம் சென்ற ஆண்டை விட 260 மில்லியன் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றது. ரூபாய் அலகில் இது 12 சத வீத வீழ்ச்சியாகக் காணப்பட்டது. அமெரிக்க டொலர் அலகில் 16.3 சத வீதத்துக்கும், சிறப்பு எடுப்பனவு உரிமைகள் (சிஎஉ) அலகில் 24 சத வீத குக்கும் சமமானதாக இவ் வீழ்ச்சி அமைந்தது.

நாட்டுக்குள் வந்தோரில் 8.06 சத வீதத்தினர் தொழில் முறைப் பயணத்தை மேற்கொண்டிருந் தனர். ஏனையோர் இன்பப் பயணிகளாவர்.

பயணிகளில் 70.52 சத வீதத்தினர் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும், 4.17 சத வீதத்தினர் ஆசிய நாடுகளிலிருந்தும் ஏனையோர் வட அமெரிக்கா விலிருந்தும் வந்திருந்தனர்.

உல்லாசப் பயணத்துறை 1987இல் 53,300 வேலை வாய்ப்புகளை வழங்கியதென மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றுள் 22,200 நேரடி வேலை வாய்ப்புக்களாகும். எஞ்சியவை நேரில் வேலை வாய்ப்புக்கள்.

1987இல் தரப்படுத்தப்பட்ட 128 பயணிகள் விடுதிகள் காணப்பட்டன. இவை 9,921 அறைகளைக் கொண்டவையாக இருந்தன. இவற்றில் தங்குவோர் வீதம் (Occupancy Rate) 32.9% மாக மட்டும் காணப் பட்டது.

உல்லாசப் பயண விடுதிகட்கு அரசாங்கம் பல சலுகைகளை வழங்கியுள்ளது. இவை பெற்ற கடன் கள் அனைத்தும் மறு பட்டியலிடப்பட்டுள்ளன. 1989 மார்ச் மாதம் வரை இவை கடன்களை மீளச் செலுத்த வேண்டியதில்லை. அத்துடன் பாதிக்கப்பட்ட விடுதி களின் தொழிற்படு மூலதனச் செலவுகட்காக வட்டி யற்ற கடனும் வழங்கப்பட்டுள்ளது.

## சந்தைப்படுத்தலும் விளம்பரஞ் செய்தலும்

#### விளம்பர நிறுவனங்கட்கு விருது

விளம்பர நிறுவனங்களின் சாதனைகளை மதிப்பீடு செய்து சிறந்தவற்றுக்கு விருது வழங்கிக் கௌரவிக் கும் இரு நிகழ்ச்சிகள் அண்மையில் நடந்தேறின. முனைப்புள்ள விளம்பர நிறுவனங்களின் கழகம் (Association of Accredited Advertising Agencies) நடாத்திய வைபவமும் இவற்றுள் முதலாவதாக அமைந்தது. விளம்பரஞ் செய்யும் செயற்பாட்டை 24 வகையாக வகுத்து ஒவ்வொரு துறையிலும் சாதனை படைத்தோர் விருது வழங்கிக் கௌரவிக் கப்பட்டனர். இதைப் போலவே இலங்கை சந்தைப் படுத்தும் நிறுவகமும் (Sri Lanka Institute of Marketing) சாதனை படைத்த விளம்பர நிறுவனங் களை விருது வழங்கிக் கௌரவித்தது. சந்தைப்படுத் தலும் விளம்பரஞ் செய்தலும் ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்த துறைகளாகும். எனவே விளம் பரஞ் செய்தலில் தொழில் முறைக் கண்ணியத்தைத் தரமுயர்த்துவதை நோக்கமாகக் கொண்டே விருது வழங்கலை இந் நிறுவகம் மேற்கொண்டது. நுகர் பொருட்கள், கைத்தொழிற் பொருட்கள், சேவை கள், கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்கள், சமூக நலன் என்று வகைப்படுத்தி விளம்பரங்கள் தேர்ந் தெடுக்கப்பட்டு அவற்றுட் சிறந்தவை விருது வழங் கிக் கௌரவிக்கப்பட்டன.

## யாக்கச் செய்திகள்

### சிலோன் சில்க்ஸ் லிற்.

சிலோன் சில்க்ஸ் லிற். என்னும் நிறுவனம் செயற்கை இழை ஆடைகளை உற்பத்தி செய்யும் பிரபலமான பொதுத் துறை நிறுவனமாகத் திகழ்ந்து வந்தது. இந் நிறுவனம் நட்டத்தில் செயற்பட்டதால் அரசாற் பொறுப்பேற்கப்பட்ட வர்த்தக நிறுவனமாகத் தொழிற்பட்டது. வெள்ளவத்தை நூற்பு, நெசவாலை வளாகத்துள் இருந்து செயற்பட்டு வந்த இந் நிறுவனம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கியமையால் மூடப்பட்டது. தற்போது இந் நிறுவனத்தின் ஆதனங்களைப் பாகிஸ்தானைச் சேர்ந்த தனியார் துறை நிறுவனம் ஒன்று கொள்வனவு செய்துள்ளது. கொழும்பு மாநகருக்குப் புறத்தே தொழிற்சாலையை அமைத்துவரும் இந் நிறுவனம் 1989இன் ஈற்றில் வர்த்தக ரீதியான செயற்பாட்டை ஆரம்பிக்குமென நம்பப்படுகின்றது.

### ஜே. வால்டர் தோம்சன்

உலகின் முன்னணி விளம்பர நிறுவனங்களில் ஒன்று ஜே. வால்டர் தோம்சன் நிறுவனமாகும். அடுத்த ஆண்டில் தனது 125ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ள இக் கம்பனிக்கு 40 நாடுகளில் 300 அலுவலகங்கள் உள்ளன. 1987இன் முடிவில் இக் கம்பனியின் வருமானம் 503 மில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்டது 3.53 பில்லியன் டொலர் பெறுமானங் கொண்ட விற்பனைப் புரள்வை இக் கம்பனி சென்ற ஆண்டில் கையாண்டிருந்தது.

### இன்போமட்டிக்ஸ் (தனி) லிற்.

மேற்படி நிறுவனம் ஒரு மில்லியன் டொலர் பெறுமதியுள்ள கணனி மென் பொருட்களை ஏற்றுமதி செய்யத் திட்டமிட்டுள்ளது. இதுவரை இத்தகைய மென் பொருட்கள் மணிலா, சிங்கப்பூர், ஜகார்த்தா, கோலாலம்பூர் போன்ற நகரங்களிலேயே அபிவிருத்தி செய்யப்பட்டு வந்தன. வங்கியியல், கப்பற்படுத்தல் துறை சார்ந்தவையாக இம் மென் பொருட்கள் அமைகின்றன. இக் கம்பனி விரைவில் கணனி மென் பொருட்களை ஜேர்மனிக்கும் ஏற்றுமதி செய்யத் திட்டமிட்டுள்ளது. இலங்கை நிறுவனமான இக் கம்பனி மேற்கு ஜேர்மன் உற்பத்தியான நிக்ஸ்டோர்வ் கணனிகளின் முகவராகும். ஐக்கிய அரபு எமிரட்ஸில் (UAE) கிளை ஒன்றினை ஆரம்பித்துள்ள இக் கம்பனி துபாயில் ஹோட்டல், வங்கித் துறைகளுக்குக் கணனித் தொகுதிகளை விற்பனை செய்துள்ளது.

### உழவு யந்திரக் கூட்டுத்தாபனம்

இலங்கைக்குப் பொருத்தமானதும் குறைந்த எடையுள்ளதும் குறைந்த செலவில் உற்பத்தி செய்யக்கூடியதுமான உழவு யந்திரம் ஒன்றினை வடிவமைத்துத் தருமாறு இக் கூட்டுத்தாபனம் இலங்கையின் பெயர் பெற்ற கண்டுபிடிப்பாளரான ரே விஜயவர்தனவுக்கு அழைப்பு விடுத்துள்ளது. முப்பது ஆண்டுகட்கு முன்னர் ஆசியாவின் எடை குறைந்ததும் செலவு சுருக்கமானதுமான சிறு உழவு யந்திரம் ஒன்று இலங்கையில் வடிவமைக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் உள்ளூர்த் தயாரிப்புகட்குப் போதிய வரவேற்பு அக்காலத்திற் காணப்படாமையால் 'லான்ட் மாஸ்டர்' என்ற பெயர் கொண்ட அவ்வியந்திரம் இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டு 21 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இதனை இறக்குமதி செய்த நாடுகளில் யப்பானும் ஒன்றாகும். இதனைத் தழுவி வடிவமைக்கப்பட்ட யப்பானிய சிறு உழவு யந்திரங்கள் தற்போது பெருஞ் சந்தைப் பங்கினை வகித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

### பிரிட்டிஷ் சிலோன் கோர்ப்பரேஷன்

மிகவும் பழைமையான இந் நிறுவனம் சென்ற ஆட்சிக் காலத்தில் அரசாற் பொறுப்பேற்கப்பட்டது. சவர்க்காரம், தெங்கு உற்பத்திப் பொருட்கள் என்பவற்றைத் தயாரித்து வரும் இந் நிறுவனம் அண்மைக் காலத்தில் பாரிய நட்டத்தில் தொழிற்பட்டு வந்துள்ளது. இதற்கு ஊழல்கள் காரணமாகக் காட்டப்பட்டன. இந் நிறுவனத்தின் நிர்வாகத்தில் அரசின் தலையீடு அவசியம் எனத் தற்போது வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இந் நிறுவனம் தனியாரிடம் கையளிக்கப்படலாம் எனவும் கூறப்படுகின்றது. எனினும் இதைப்பற்றிய திடமான அறிக்கை எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை. தனியார் மயமாக்கம் குறித்த ஆணைக் குழுவின் தலைவர் கையளிக்கப்படவுள்ள நிறுவனங்களின் பட்டியலில் இதுவும் இடம் பெற்றிருந்த போதும் இத்தகைய பெரிய நிறுவனமொன்றை எளிதிற் கையளித்திட முடியாது எனக் கூறியுள்ளார். மஹாராஜா நிறுவனம் இதனைப் பொறுப்பேற்கக் கூடும் எனவும் கூறப்படுகின்றது. 'அழுக்ககற்றிகள் (Detergents) சந்தையும், அதில் பீ. சி. சி. யின் பங்கும்' என்பது பற்றிய சந்தை வள ஆய்வொன்றினை அந் நிறுவனம் மேற்கொண்டுள்ளது என்றும் அறிவிக்கப்படுகின்றது. இந் நிறுவனத்தின் 2,000 ஊழியரும் அவர்கள் சார்ந்துள்ள தொழிற் சங்கங்களும் தனியாரிடம் இந் நிறுவனம் கையளிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். விரைவில் நிகழவுள்ள தேர்தல் காரணமாகத் தனியார் மயமாக்கும் நிகழ்ச்சித் திட்டம் பிற்போடப்படக் கூடுமாதலால் இவ்வாண்டின் இறுதிக்குள் இந் நிறுவனம் தனியாரிடங் கையளிக்கப்படக் கூடிய சூழ்நிலை இல்லை என்றே கூறலாம்.

# இலங்கையின் பாரம்பரியமற்ற ஏற்றுமதிகள்
# NON TRADITIONAL EXPORTS OF SRI LANKA

இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 24 சதவீதத்துக்கு மேற்பட்ட அளவு ஏற்றுமதி மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. ஏற்றுமதிப் பொருட்களில் தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள் என்பவை மரபு தழுவியவை என்றும் ஏனையவை அம் மரபுப் பொருட்கள் அல்லது பாரம்பரியமற்ற ஏற்றுமதிகள் எனவும் அழைக்கப்படுகின்றன. 1979—87 க்கு இடைப்பட்ட காலப் பகுதியில் பாரம்பரியமற்ற ஏற்றுமதிகள் பெருமளவு வளர்ச்சி பெற்றுள்ளன. இவ் வளர்ச்சியின் ஆண்டுச் சராசரி 11 சதவீதத்துக்குச் சமமானதாகும். எனினும் தயாரித்த ஆடைகள், பெற்றோலிய உற்பத்திகள் என்பவற்றிலேயே குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டது. இவை நீங்கலான ஏனைய ஏற்றுமதிப் பொருட்களும் தற்போது முக்கியத்துவம் பெற்று வருகின்றன.

வைரக் கற்களை இறக்குமதி செய்து அவற்றைப் பட்டை தீட்டி, மெருகூட்டிப் பின்னர் அவற்றை மீளவும் ஏற்றுமதி செய்தல் தற்போது வேகமாக வளர்ச்சி பெற்றுவருந் துறையாக அமைந்துள்ளது. இத் தொழில் 1974இல் முதன் முறையாகத் தொடக்கப்பட்ட போதும் 1983இன் பின்னரே இது பொருளாதார ரீதியில் சாத்தியமுள்ள தொழிலாக மாற்றியமைக்கப்பட்டது. தற்போது இத் தொழிலைப் பத்துத் தனியார் துறை நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன. இவற்றில் ஆறு நிறுவனங்களின் தொழிற்சாலைகள் சுதந்திர வர்த்தக வலயங்கட்குப் புறத்தே அமைந்துள்ளன. உலகின் வைர வியாபாரப் புரள்வில் இலங்கையின் பங்கு ஆயிரத்தில் ஒரு பங்கு மட்டுமே. ஊழியச் செறிவு மிக்க இத் தொழிலில் ஏறத்தாழ 2,500 பேர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். இத் தொழில் மிக விரைவாக வளர்ச்சி பெறும் வாய்ப்பினைக் கொண்டதென ஏற்றுமதி அபிவிருத்தி சபை எதிர்வு கூறியுள்ளது. ஆடைக் கைத்தொழிலை விட விரைவாக அந்நியச் செலாவணி ஈட்டித் தரும் தொழிலாக இது வளர்ச்சி பெறும் எனவும் அடுத்த சில வருடங்களில் வைரங்களைப் புதனிடுவதால் பெற்றுக் கொள்ளப்படும் வருமானத்தை ஆண்டுக்கு 20 — 30 பில்லியன் ரூபாய்களாக அதிகரிக்க முடியுமெனவும் இச் சபை நம்புகின்றது.

இலங்கையின் பாரம்பரியமற்ற ஏற்றுமதிகளில் பழங்களும் அடங்குகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில் இலங்கையில் பழச் செய்கை மேற்கொள்ளப்படும் நிலத்தின் அளவு 96 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. தற்போது 30 உள்ளூர் கம்பனிகளும் 34 ஏற்றுமதி மேம்பாட்டுக் கிராமங்களும் ஏற்றுமதிக்காகப் பழங்களை உற்பத்தி செய்து வருகின்றன. ஆஸ்திரியா, பெல்ஜியம், டென்மார்க், மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், ஒல்லாந்து, நோர்வே, பிரித்தானியா, மத்திய கிழக்கு நாடுகள் என்பவற்றுக்கு அவகாடோ, அன்னாசி, பப்பாசி, வாழை ஆகிய வகைப் பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. இதைப் போலவே மரக்கறிகளும் மாலைதீவுகள், மத்திய கிழக்கு நாடுகள், ஐரோப்பிய நாடுகள் என்பவற்றுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

நீரில் வளருந் தாவரங்கள் (Aquatic plants) ஏற்றுமதி வாய்ப்புள்ள தாவரங்களாக இனங்காணப்பட்டுள்ளன. இலங்கையில் தாராளமாகக் காணப்படும் இவ் வகைத் தாவரங்கள் மேலும் வளர்க்கப்பட்டு ஏற்றுமதி செய்வதற்காக டென்மார்க் போன்ற நாடுகட்கு அனுப்பப்பட்டு வருகின்றன. செழிப்பான ஒரு தொழிலாக இது வளர்த்தெடுக்கப்படலாம் எனவும் பலருக்கு வேலை வாய்ப்புகளை வழங்கக்கூடியதாக இருக்குமெனவும் கூறப்படுகின்றது.

அலங்காரத்துக்காக வீட்டினுள் வளர்க்கப்படும் இலைத் தாவரங்களும் (Foliage Plants) ஏற்றுமதிக்காகப் பயிரிடப்படுகின்றன. ஆனால் மூலதனச் செறிவுள்ள தொழில் இதுவாகும். ஆனால் ஒரு ஏக்கர் நிலத்தில் இத் தாவரங்களை வளர்ப்பவர் ஒருவர், ஒரு மில்லியன் ரூபாய்களை வருமானமாகப் பெற்றுக் கொள்ளவும் முடிகின்றது. வீட்டினுள் வளர்ப்பதற்காகச் செவ்விளநீர் நாற்றுக்கள் இத்தாலிக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

ஏற்றுமதி செய்யப்படுவதற்கென மூலிகைகள் பயிரிடப்பட்டு வருகின்றன. தீராத நோய்களைக் கூடக் குணப்படுத்தக் கூடிய மாத்திரைகளை உற்பத்தி செய்வதற்காக மூலிகைகளின் இலை, விதைகள், பழங்கள் ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தேடுவாரற்றுக் கிடக்கும் நெருப்பு மல்லிகை (Minimal) போன்றவை கூடத் தற்போது ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

வண்ண மீன்களும் (Ornamental Fish) ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 1985இல் இதிலிருந்து 31 மில்லியன் ரூபாய்களும், 1986, 87 ஆகிய ஆண்டுகளில்

முறையே ரூபா 32 மில்லியன், ரூபா 38 மில்லியனும் வருமானமாகப் பெறப்பட்டது. இந்த அதிகரிப்பைத் தொடர்ந்து நன்னீரில் அதிகளவு வண்ண மீன்கள் வளர்ப்பதற்குத் தனியார் துறையை ஊக்குவிக்கும் பல நடவடிக்கைகளை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மேற்கொண்டு வருகின்றது. ஜப்பான், ஹொங்கொங், சிங்கப்பூர், டென்மார்க், பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் இவற்றுக்கு நல்ல சந்தை கிடைத்து வருகின்றது.

பழங்கள், மரக்கறிகள், தாவரங்கள், வண்ண மீன்கள் என்பவை விமான மார்க்கமாகவே இடம் நகர்த்தப்படுகின்றன. வணிபப் பயணங்களை மேற்கொள்ளும் விமானங்களில் உள்ள சரக்கறைகளைப் (ireight space) பயன்படுத்தி இவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆனால் தயாரித்த ஆடைக் கைத்தொழிலும் இதே இட வசதிக்காகப் போட்டியிடுவதனால் விமானங்களில் இடத் தட்டுப்பாடு காணப்படுகின்றது. இதனால் ஏற்றுமதிகள் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது. விமானங்களை வாடகைக்கு அமர்த்தி (charter) இப் பிரச்சினையை எதிர்கொள்ள எத்தனிக்கப்படுகின்றது. இறுக்கமான கொள்கலன்களைப் (reefer containers) பயன்படுத்தி பழங்களைக் கடல் மார்க்கமாக ஏற்றுமதி செய்வதற்குள்ள சாத்தியக் கூறுகள் பற்றி ஏற்றுமதி அதிகார சபை ஆராய்ந்து வருகின்றது. பழங்களின் ஏற்றுமதியில் பொதியிடல், களஞ்சியப்படுத்தல் தொடர்பாகவும் பல பிரச்சினைகளும் எதிர்கொள்ளப் படுகின்றன.

'அகார்' (agar) என அழைக்கப்படும் ஒரு வகை ஜெலி தயாரிப்பதற்காகச் சாதாளை (sea weed) யப்பானுக்கு ஏற்றுமதியாகின்றது. சுறா மீன் எண்ணெய் (shark liver oil) இவ்வாறே யப்பானுக்கு அனுப்பப்படுகின்றது. பப்பாசிக் காயிலிருந்து பெறப்படும் பப்பெயின் (Papain) யப்பான், ஜேர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகட்கு ஏற்றுமதியாகின்றது. பல்வேறு வகையான கைத்தொழிற் தேவைகட்கு இத் திரவம் பயன்படுத்தப்படுகின்றது.

தேங்காய்ச் சிரட்டைக் கரி பதனிடப்பட்டும் (activated carbon), பதனிடப்படாதும் (charcoal) ஏற்றுமதியாகின்றது. பதனிடப்பட்ட கரி கைத்தொழிற் தேவைகட்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

துடைப்பந் தயாரிப்பதற்காகத் தென்னை ஈர்க்கு (ekel) பாகிஸ்தானுக்கு ஏற்றுமதியாகின்றது. பூங்கனியியற் பண்ணைகளில் காற்றின் ஈரப்பதத்தைக் காக்கும் ஊடகமாகப் பயன்படுத்துவதற்காகத் தேங்காய் மட்டைகள் பதனிடப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

பங்களாதேஷில் உற்பத்தி செய்யப்படும் கொகோ கோலா, பான்டா, ஸ்பிரைட் ஆகிய மென்பானப் போத்தல்கட்கான மூடிகளை இலங்கை நிறுவனம் ஒன்று தயாரித்து ஏற்றுமதி செய்கின்றது. நேபாளம், மத்திய கிழக்கு நாடுகள் என்பவற்றுக்கும் இதே வகையான பொருட்களை 'அமிக்கோ இன்டஸ்றீஸ்' என்ற இந்த நிறுவனம் ஏற்றுமதி செய்து வருகின்றது. அத்துடன் உணவு வகைகளைத் தகரங்களில் அடைப்பதற்குத் தேவையான அச்சிடப்பட்ட தட்டையான உலோகத் தகடுகளையும் உற்பத்தி செய்து இந் நிறுவனம் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றது.

தோல் தயாரிப்பின்போது எஞ்சும் கழிவுகள் எலும்பு போல் பதனிட்டு வளர்ப்புப் பிராணிகளின் பாவனைக்கென ஐரோப்பிய நாடுகட்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆடைத் தொழிலில் எஞ்சும் வெட்டுத் துணிகள் அழகான தள விரிப்புகளாக்கப்பட்டு சுவீடனுக்கு ஏற்றுமதியாகின்றன. ஏற்றுமதிக்காகத் தயாரிக்கப்படும் மென் விளையாட்டுப் பொருட்களுக்கும் இவை மூலப் பொருளாகின்றன.

ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்படும் பொருட்களில் செயற்கை ஆபரணங்களும் (Costume jewellery) அடங்கும். கொரியா, யப்பான், ஜேர்மனி போன்ற நாடுகளுக்கு மனித முடி (human hair) கூட ஏற்றுமதியாகின்றது.

திடீர் இடியப்பம் இங்கிலாந்து, கனடா போன்ற நாடுகட்கு ஏற்றுமதியாகின்றது. அத்துடன் கறி வகைகளும் தகரத்திலடைக்கப்பட்டு ஏற்றுமதியாகின்றது.

பாரம்பரியமற்ற ஏற்றுமதிகளில் தற்போது 'பியர்' பானமும் சேர்ந்துள்ளது. யப்பானுக்கு ஏற்கனவே ஏற்றுமதி செய்யப்பட்டுவரும் இப் பான வகை பெல்ஜியம், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு விரைவில் ஏற்றுமதி செய்யப்படவுள்ளது.

சிறப்புக் கட்டுரை - 1

# இலங்கையின் மரபு ரீதியற்ற ஏற்றுமதிகள் கொள்கைகளும் போக்குகளும்

# NON TRADITIONAL EXPORTS - POLICIES AND TRENDS

செல்வி க. பொன்னுத்துரை, B. A. (Hons.)
ஆசிரியை, நொச்சிமோட்டை கனிஷ்ட வித்தியாலயம், வவுனியா.

## அறிமுகம்

இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களை அவற்றின் தன்மையினடிப்படையில்

1) மரபு ரீதியான ஏற்றுமதிகள்

2) மரபு ரீதியற்ற ஏற்றுமதிகள் என இரு பிரிவாகப் பிரிக்கலாம். பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலிருந்தே அதிகளவில் ஏற்றுமதி செய்யப்பட்ட பெருந்தோட்ட உற்பத்திகளான தேயிலை, இறப்பர், தெங்கும் அதனது உற்பத்திகளும் ஆகியவை மரபு ரீதியான ஏற்றுமதிகள் எனவும், இவை தவிர்ந்த ஏனையவை எல்லாம் மரபு ரீதியற்ற ஏற்றுமதிகள் எனவும் பொதுவாகக் கருதிக் கொள்ளப்பட்டன. 1984-ம் ஆண்டு 14-ம் இலக்க உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம் "வரி விலக்களுக்குட்படாத பாரம்பரிய ஏற்றுமதிகளான தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்திகள், இரத்தினக் கல் என்பவை தவிர்ந்த ஏனைய ஏற்றுமதிகள் எல்லாம் மரபு ரீதியற்ற ஏற்றுமதிகள்'' எனக் கணிக்கப்பட்டன. 1977-ம் ஆண்டு பதவிக்கு வந்த புதிய அரசாங்கத்தின் திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் ஏற்றுமதி ஊக்குவிப்பினை முக்கியமான நோக்கமாகக் கொண்டிருந்த இலங்கை மத்திய வங்கி, இக் கருத்திலிருந்து விலகி தனது மீள் நிதியீட்ட மானிய வசதியினைக் கருத்திற் கொண்டு ஏற்றுமதிகளை இரு கூறுகளாகப் பிரித்திருந்தது. இதன்படி மீள் நிதியீட்ட மானிய வசதியைப் பெற்றுக் கொள்கின்ற (தேயிலை, இறப்பர், தெங்கும், அதனது பாரம்பரிய உற்பத்திகளும், பெற்ரோலிய உற்பத்திகளும் தவிர்ந்த) எல்லா உற்பத்திகளும் மரபு ரீதியற்ற ஏற்றுமதிகளாக இரண்டாங் கூறினுள் அடக்கப்படுகின்றன. இவ்வகையில் இலங்கையின் மரபு ரீதியற்ற ஏற்றுமதிகளாக, புடைவையும் ஆடைகளும், கறுவா, ஏலம், மிளகு போன்ற வாசனைத் திரவியங்கள், சிறு ஏற்றுமதிப் பொருட்கள், பிரசித்தி பெற்ற, செம்மையாக்கப்பட்ட அருங் கற்கள், தெங்கு தயாரிப்புகள், தயாரிப்புப் பொருட்கள் போன்றவை இடம்பெறுகின்றன.

## வரலாற்றுக் கண்ணோட்டம்

இம் மரபு ரீதியற்ற ஏற்றுமதிப் பொருட்களில் சில இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னரிலிருந்தே ஏற்றுமதி நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவை மொத்த ஏற்றுமதிகளில் கொண்டிருந்த பங்கு மிகக் குறைவானதேயாகும். 1948-ம் ஆண்டில் பிரித்தானியர் ஆட்சியிலிருந்து விடுபட்டு இலங்கை சுதந்திரம் அடைந்த போதிலும் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை இவை குறிப்பிடத் தக்க திருப்பங்கள் எதனையும் ஏற்படுத்தவில்லை. இதனால் 1948-ன் பின்பும் இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரம் கடந்த காலத்திற்குரிய விசேட தன்மைகளைக் கொண்டதாகவே அமைந்திருந்தது. 1970-ம் ஆண்டு வரை மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 90 சதவீதத்துக்குப் பொறுப்பானவையாக, பாரம்பரிய விவசாய ஏற்றுமதிகளே காணப்பட்டன. 10 சதவீதத்துக்கும் குறைவானதொரு பங்கினையே மரபு ரீதியற்ற ஏற்றுமதிகள் பெற்றிருந்தன.

### இலங்கையின் ஏற்றுமதி அமைப்பு — 1950 – 70

| ஆண்டு | மரபு ரீதியான பொருட்கள் | மரபு ரீதியற்ற பொருட்கள் |
|---|---|---|
| 1950-53 | 90% | 10% |
| 1960 | 91% | 09% |
| 1965 | 92% | 08% |
| 1970 | 89% | 11% |

இலங்கைப் பொருளாதாரத்தின் ஏற்றுமதி அமைப்பினைப் பொறுத்த இச் சிறப்பு நிலையானது அதற்குரிய முக்கிய வருமான மூலமாக அமைந்திருந்த போதிலும் தொடர்ந்து வந்த தேவைகளைப் பூர்த்தி செய்யப் பொருத்தமானதாக அமையவில்லை. இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்த காலப் பகுதியிலிருந்து இலங்கையின் மரபு ரீதியான ஏற்றுமதிகளுக்கான உலகக் கேள்வியில் பிரதிகூலமான நிலைமைகள், ஏற்பட்டு வருவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. இது நீண்ட காலமாக வளர்ச்சியடைந்து வந்த வர்த்தகத்தின் வாய்ப்புக்கள் தொடர்பாகப் பாதக நிலையை ஏற்படுத்தின. இந் நிலையில் 1951-ல் இலங்கைக்கு விஜயம் செய்த உலக வங்கிப் பொருளாதாரத் தூதுக் குழு ஏற்றுமதித் துறையில் பழைய உத்வேகம் தொடர்ந்து இருந்து வருவது சாத்தியமல்லை என்று கருத்துத் தெரிவித்தது. எனினும் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலப் பகுதியில் ஏறக்குறைய 1960கள் வரை ஏற்றுமதி அமைப்பினைப் பன்முகப்படுத்துவதற்கோ அல்லது எதிர்காலச் சவால்களை எதிர்நோக்குவதற்குரிய புதிய உற்பத்திகளை மேற்கொள்வதற்கோ எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. பதிலாக உலக சந்தையின் பாதக நிலைமையால் ஏற்பட்ட அந்நியச் செலாவணி நெருக்கடியைச் சரியான படி முகாமை செய்யவேண்டியதொரு தேவை அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. இச் சந்தர்ப்பத்தில் உள்நாட்டு விவசாயத்தினையும் கைத்தொழில் முயற்சிகளையும் விரிவாக்குவதன் மூலம் இறக்குமதி அளவினைக் கட்டுப்படுத்தி அந்நியச் செலாவணிப் பிரச்சனையைக் குறைத்துக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப் பட்டமையினுல் அக் காலத்தில் பதவியிலிருந்த அரசாங்கம் மரபு ரீதியற்ற பொருட்களின் ஏற்றுமதி அபிவிருத்தி பொறுத்து அதிகளவில் அக்கறை செலுத்தவில்லை.

1960களின் பிற்பகுதியில் இவ் இறக்குமதிப் பிரதியீட்டு உபாயம் ஒரு நெருக்கடி நிலையை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அதாவது புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட கைத்தொழில்கள் இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களையும் மூலப் பொருட்களையும் அதிகளவுக்குச் சார்ந்திருந்தமையால் தொடர்ந்தும் பாரம்பரிய ஏற்றுமதிகளின் முக்கியத்துவம் அதிகமானதாக இருந்தது. ஆனுல் இவற்றின் ஏற்றுமதி வருமானம் தேக்கமாக இருந்ததுடன் உள்நாட்டு விவசாயத்தின் வழி பெறப்பட்ட இறக்கும்திச் சேமிப்பும் மிகக் குறைவாகவே இருந்தது.

### அறுபதுகளில் கொள்கை மாற்றங்கள்

இச் சந்தர்ப்பத்தில் ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்த வேண்டிய தேவை அவசியமானதாக அமைந்த போது 1960 களின் ஆரம்பத்திலிருந்தே வர்த்தகத் தொடர்பான கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. பதவிவியிலிருந்த அரசாங்கம் ஏற்றுமதிக்கான உற்பத்திகளை ஊக்குவிக்கும் வகையில் ஏற்றுமதிக்குரிய உற்பத்திகளில் உபயோகிக்கப்படும் உள்ளீடுகளுக்காகச் செலுத்தப்படுகின்ற இறக்குமதித் தீர்வைகளை மீளளிக்கும் இறக்குமதித் தீர்வைக் கழிவுத் திட்டமொன்றினை உருவாக்கியது. 1964-ல் முன்வைக்கப்பட்ட இக் கொள்கையைத் தொடர்ந்து, 1966-ல் தெரிவு செய்யப்பட்ட பாரம்பரியமற்ற ஏற்றுமதிகளுக்கு இறக்குமதி உரிமையளிக்கும் திட்டம் ஒன்றும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. அத்துடன் நாணய ரீதியில் இருந்த குறைபாடுகளை நீக்கி ஏற்றுமதியைப் பலப்படுத்தும் நோக்கில் 1967-ன் பிற்பகுதியில் நாணயச் சீர்திருத்தம் ஒன்று முன்வைக்கப்பட்டது. இதன் கீழ் நீண்ட காலத்தின்பின் இலங்கை ரூபாவின் பெறுமதி 20 சதவீதத்தால் குறைக்கப்பட்டது. இதன் மூலம் ஏற்றுமதிகள் ஊக்குவிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் ரூபாவின் அமுக்கம் தொடர்ந்து அதிகரித்துச் சென்ற ஒரு சூழ்நிலையில் இது வெற்றியளிப்பதாக அமையவில்லை. இந் நிலையில் 1968 மே மாதத்தில் மீண்டும் நாணயப் பெறுமதியில் மாற்றங் கொண்டு வரப்பட்டது. இம் மாற்றமானது சாதாரணமான நாணயப் பெறுமதி இறக்கங்களைப் போல் அதனது பெறுமதியை முழுமையாகக் குறைக்காமல் ஒரு அரைகுறை மாற்றத்தினை ஏற்படுத்தியதாக அமைந்திருந்தது. இதுவே அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் எனப்பட்டது. மரபு ரீதியற்ற ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் வகையில் எடுக்கப்பட்ட முக்கியமான நாணயச் சீர்திருத்தம் இது எனலாம். இதன் கீழ் அத்தியாவசிய இறக்குமதிகளும் மரபு ரீதியான ஏற்றுமதிகளும் நிர்ணயிக்கப்பட்ட ஒரு நாணய மாற்று வீதத்திற்குட்பட அத்தியாவசியமற்ற இறக்குமதிகளும் மரபு ரீதியற்ற ஏற்றுமதிகளும் இன்னெர் மாற்று வீதத்திற்குட்படுத்தப்பட்டன. இம் மாற்றுவீதம் உத்தியோக பூர்வ வீதத்தை விட உயர்வான தொன்ருகக் காணப்பட்டமையால் மரபு ரீதியற்ற ஏற்றுமதியாளர் உயர்ந்த வருமானத்தினை உழைத்துக்கொள்ள முடிந்தது. அதிகரித்துச் சென்ற ஏற்றுமதி உழைப்புகள் மூலம் இலங்கையின் ஏற்றுமதித் துறையினைப் பலப்படுத்தக் கூடியதாக இருந்தமையால் சென்மதி நிலுவையின் சமமற்ற தன்மையினை ஓரளவுக்குச் சீர் செய்வதற்கு வாய்ப்பான சூழ்நிலை காணப்பட்டது. இச் சரிப்படுத்தல் முயற்சியின் மத்தியிலும் சர்வதேச வர்த்தகம் எதிர்நோக்கியிருந்த நெருக்கடி நிலை இலங்கையின் பொருளாதாரத்தைப் பல வழிகளில் தாக்கியிருந்தது. நாடு தனக்குத் தேவையான இறக்குமதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு முன் என்றுமில்லாத வகையில் பாரியளவான கடன்களை உலக நாடுகளிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டி நேரிட்டது.

### எழுப்துகளின் மாற்றமுற்ற சூழ்நிலை

கடன் சுமையால் விரிவடைந்து வரும் மூலவள இடைவெளியை நிரப்ப வேண்டிய உடனடித் தேவையும் 1970 களின் ஆரம்பத்தில் ஏற்பட்ட எண்ணெய் விலை உயர்வும் அத்துடன் தொடர்பான சென்மதி நிலுவை நெருக்கடிகளும் அந்நிய செலாவணியைச் சம்பாதிக்கும் வகையில் ஏற்றுமதிகளைப் பன்முகப் படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. இந்நிலையில் 1970-ல் ஆட்சி பீடமேறிய அரசாங்கம் இதனை அதிக கவனத்திற் கொண்டு கைத்தொழில் உற்பத்தியினை அடிப்படையாகக் கொண்ட புதிய ஏற்றுமதித் துறையை உருவாக்குவதனையும் அபிவிருத்தி செய்வதனையும் மரபு ரீதியற்ற ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதனையுமே தனது முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருந்தது. இக் கொள்கையின் வெளிப்பாடாக அவே அதனுடைய பல்வேறு வகையான நடவடிக்கைகளும் அமைந்திருந்தன.

### நிறுவன ரீதியான ஏற்பாடுகள்

மரபு ரீதியற்ற ஏற்றுமதிகளில் பெருமளவு வருமானத்தைத் தேடிக் கொடுத்து வந்த இரத்தினக் கல்லின் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கென இரத்தினக் கற் கூட்டுத்தாபனமும், நாட்டின் ஏற்றுமதி அபிவிருத்தி முயற்சியை நெறிப்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்குமான தலைமைக் கழகமாக இயங்க 1972-ல் ஏற்றுமதி ஊக்குவிப்புச் செயலகமும் ஸ்தாபிக்கப்பட்டன. மேலும் சிறு விவசாய ஏற்றுமதிப் பயிர்களுக்கான விஸ்தரிப்புச் சேவைகளை வழங்குவதற்கும், புனரமைப்பு, புதிய நடுகை மானிய உதவிகளைச் செய்வதற்கும் ஏற்ற வகையில் சிறு ஏற்றுமதிப் பயிர்த் திணைக்களமும் நிறுவப்பட்டிருந்தது.

### மாற்றத்தக்க ரூபாய்க் கணக்குகள்

இவை ஒரு புறமிருக்க ஏற்கனவே நாணய ரீதியில் சலுகைக்குட்படுத்தப்பட்டிருந்த மரபு ரீதியற்ற ஏற்றுமதிகளுக்கு மேலுமோர் தூண்டுதல் வழங்கும் வகையில் மாற்றத்தக்க ரூபாய்க் கணக்குத் திட்டம் ஒன்றும் முன்வைக்கப்பட்டது. இதன்கீழ் மரபு ரீதியற்ற ஏற்றுமதிகளின் மூலமான வருமானத்தின் ஒரு குறிப்பிட்ட வீதாசாரத்தைச் சர்வதேச ரீதியாக விரும்பிய நாணயத்தில் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. 1972-ல் இரத்தினக்கல் ஏற்றுமதிக்கென அறிமுகம் செய்யப்பட்ட இத் திட்டம் வெகு விரைவில் ஏனைய மரபு ரீதியற்ற ஏற்றுமதிகளுக்கும் விரிவு படுத்தப்பட்டது. இந் நாணயச் சலுகையின் வழி இரத்தினக் கல் ஏற்றுமதி வருமானம் வேகமாக உயர்வடைந்து சென்றது.

### வரிச் சலுகைகள்

இவற்றுடனிணைந்த வகையில் கைத்தொழிற் பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்குவிப்பதற்காக ஏற்கெனவே இருந்த கைத்தொழில்களுக்கு ஐந்து வருட வரி விடுமுறையும், புதிதாக ஆரம்பிக்கப்படும் கைத்தொழில்களுக்கு எட்டு வருட வரி விடுமுறையும் வழங்கப்பட்டது. இவை மட்டுமன்றி இலங்கை எதிர் நோக்கியுள்ள பெரும் மூலதனப் பிரச்சினைக்கு உதவும் வகையில் ஏற்றுமதி நோக்குள்ள நேரடி தனியார் கூட்டு வெளிநாட்டு முதலீடுகட்குச் சலுகை அளிப்பதென்ற வெள்ளை யறிக்கை யொன்றும் 1972-ல் தயாரிக்கப்பட்டது.

பதவியிலிருந்த அரசாங்கத்தினல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வழி இலங்கையின் ஏற்றுமதி அமைப்பில் குறிப்பிடத் தக்களவு மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன, இதுவரை இருந்த அமைப்புக்கு மாறாக மரபு ரீதியற்ற ஏற்றுமதிகள் கணிசமான ஒரு இடத்தை வகிக்கத் தொடங்கின. 1974-ம் ஆண்டில் இலங்கையின் மொத்த ஏற்றுமதி உழைப்புக்களில் 30% மரபு ரீதியற்ற ஏற்றுமதிகளால் பெறப்பட்டது. 1970 களின் பிற்பகுதிகளில் மரபு ரீதியான ஏற்றுமதிகளின் பங்கானது செங்குத்தான வடிவில் வீழ்ச்சியடைந்து செல்வதாக அமைந்திருந்தது.

### ஏனைய காரணிகளின் தாக்கங்கள்

1970-ன் பின் இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகத்தினைப் பொறுத்து இத்தகைய சிறப்பு நிலையினைக் காண முடிந்தாலும் அரசாங்கக் கொள்கைகள் மூலம் நாட்டின் பொருளாதார அமைப்பிலும், இறக்குமதி அமைப்பிலும் ஏற்பட்டிருந்த நெருக்கடிகள் பாரதூரமான விளைவுகளை உருவாக்கியிருந்தன. எண்ணெய் விலையுயர்வுடன் ஏற்பட்டிருந்த உலகளாவிய பணவீக்கம், உணவு நெருக்கடி, உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சி என்பன இலங்கையின் சென்மதி நிலுவையை மோசமாக்கியது. ஏற்றுமதி மூலமான வருமானம் அதிகரித்த வேளை இறக்குமதிச் செலவினைக் குறைத்துக் கொள்ள முடிந்திருந்தால் வெளிநாட்டு வர்த்தகத்தில் சிறப்பு நிலையினை இலங்கை அனுபவித்திருக்க முடியும். ஆனல் இறக்குமதி விலையுயர்வினல் சென்மதி நிலுவையில் ஏற்பட்ட பாரிய சமமின்மையை ஈடு செய்யும் அளவுக்கு ஏற்றுமதிகளின் அதிகரிப்பு இடம்பெற்றிருக்கவில்லை.

### புதிய கொள்கைத் தொகுதி

இத்தகைய மோசமான நிலையில் பதவியேற்ற சுதந்திர இலங்கையின் தற்போதைய அரசாங்கம் இதுவரை காலமும் அதிகளவான கட்டுப்பாட்டுக்குள்

விருந்த வெளிநாட்டு வர்த்தகத்தில் துண்டு துண்டாகத் திருத்தங்கள் செய்வதன் மூலம் பிரச்சனைக்கு நிரந்தரமான பரிகாரம் எதனையும் காண முடியாது என்பதனை உணர்ந்து பொருளாதாரத்தில் அடிப்படையான மாற்றம் ஒன்றை ஏற்படுத்த முற்பட்டது. உலகப் பொருளாதாரத்துடன் இணைந்து செயற்படுவதன் மூலம் தான் அபிவிருத்தியடைய முடியும் எனக் கருதியிருந்தது. இத்தகைய ஒரு கொள்கையின் அடிப்படையிலேயே 1977-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பாரிய சீர்திருத்தம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. வெளிநாட்டு வர்த்தகம் பொறுத்த இக் கொள்கையை நிதி மந்திரியின் அறிக்கையிலிருந்து தெளிவாகப் புரிந்து கொள்ளமுடிகின்றது. எனது அரசாங்கம் வர்த்தகம், உதவி, வெளிநாட்டு முதலீடு என்பவற்றினை வரவேற்கின்றது. இவையே எமது பொருளாதாரக் கொள்கையின் அத்திவாரங்கள். வெளிநாட்டு முதலீட்டாளருக்குத் தேவையான முதலீட்டுப் பாதுகாப்பு, தூண்டுதல்கள் என்பவற்றினை வழங்கி அவற்றினை உச்சப்படுத்துவதே எமது நோக்கம் நாம் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி என்பவற்றிடம் இருந்தும் மற்றும் உலக நாடுகளிடமிருந்தும் உதவியையும் ஆதரவையும் எதிர்பார்க்கின்றோம். தனியார் துறைக்கு எமது பொருளாதாரத்தில் தகுந்த இடம் வழங்குவோம். சுதந்திரமான, நியாயமான சமூகம் ஒன்றுக்குரிய அடிப்படைச் சுதந்திரமானது நியாயமான ஒரு பொருளாதாரத்தின் மூலம் ஏற்பட முடியும். அதற்கேற்ற வகையில் கடந்த காலங்களில் இருந்தே கட்டுப்பாட்டுக் குட்பட்ட கொள்கையிலிருந்து விலகிக் கூடியளவுக்குத் தாராளத் தன்மையை நோக்கிச் செல்வோம் என்ற வகையில் புதிய கொள்கைப் பிரகடனம் விடுக்கப்பட்டது. இவ்வாறு செய்வதன் மூலம் வேகமாக முன்னேறி வரும் ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைப் போல அபிவிருத்தி அடையலாம் எனவும் வெளிப்புற நோக்கில் அபிவிருத்திக்கு வழி வகுக்கும் ஒரு தனிக் காரணி ஏற்றுமதி விரிவாக்கத்தைச் செய்தலேயாகும் எனவும் கருதப்பட்டது. 1977-ன் புதிய கொள்கையின் கீழ் முதலிடம் அளிக்கப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்தி தொடர்பாகப் பல்வேறு கொள்கைகள் முன்வைக்கப்பட்டன. அவற்றுள் முக்கிமானவையாகக் குறிப்பிடக் கூடியவை இறக்குமதிகள் மீது இதுவரை இருந்து வந்த பெரும்பாலான கட்டுப்பாடுகளை அகற்றி வர்த்தகத்தினைத் தாராளமயமாக்குதல், நாணய அம்சத்தினைப் பொறுத்தவரை நடைமுறையிலிருந்த இரட்டை நாணய மாற்று விதத்தில் ஒருமைப்பாட்டினை ஏற்படுத்தும் வகையில் அதனை நீக்கி நாணயத்தின் பெறுமதியினை மிதக்க விடுதல், உள்நாட்டுப் பொருளாதாரத்தின் மீதுள்ள பல்வேறு கட்டுப்பாடுகளையும் ஒழித்துத் தனியார் துறை முனைப்புக்கு வழி வகுத்தல் போன்றவற்றினைக் கூறிக் கொள்ளலாம், வெளிப்புறம் நோக்கிய கொள்கைகள் மீது இதுவரை இருந்து வந்த கட்டுப்பாடுகளை நீக்கியதன் மூலம் ஏற்றுமதி உற்பத்தியில் ஈடுபடுவதற்கான இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளும் இயந்திர சாதனங்களும் கால நேரத்தில் கிடைப்பதனை உறுதிப்படுத்தலாம் என்பதுடன் நியாயமான போட்டியின் கீழ் உள்நாட்டு உற்பத்தியாளர்களின் தரச் சிறப்புணர்வை விரிவாக்கி வெளிநாட்டு உற்பத்திகளுடன் போட்டியிட முடியும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. நாணயப் பெறுமதி தொடர்பாக இருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தி இலங்கை ரூபாவுக்கு ஒரு யதார்த்தமான வெளிநாட்டுப் பெறுமதியைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் ஏற்றுமதிப் பொருட்களின் போட்டியிடும் வல்லமையை உயர்த்த வழி செய்யப்பட்டது. இவற்றுடனிணைந்த வகையில் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் இருந்த பல்வேறு வகையான கட்டுப்பாடுகளும் தாராளமயமாக்கப்பட்டு, பொருளாதார நடவடிக்கையில் தனியாரை வரவேற்பதனையே தனது முக்கியமான நோக்கமாகக் கொண்டிருந்தது. பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய வகையில் தனியார் முதலீடுகள் உள்நாட்டு மட்டத்தில் இடம் பெறுதவிடத்து அதனைப் பூர்த்தி செய்யும் வகையில் வெளிநாட்டு முதலீடுகள் வரவேற்கப்பட்டன. இக் கொள்கைகளின் வழி ஆரம்ப நிலையில் இறக்குமதிகளின் வேகம் மிக அதிகமானதாக அமைந்து நாட்டினுடைய வர்த்தக இடைவெளி ஒரு உரிய நிலையை அடையும். எனினும் கால கெதியில் அதற்கேற்ப ஏற்றுமதிகள் அதிகரித்து நீண்ட கால ரீதியில் சாதக நிலையை அனுபவிக்க முடியும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

### நிறுவன அமைப்பில் மாற்றங்கள்

இக் குறிக்கோள்களை எய்தும் வகையில் புதிய அரசாங்கத்தினுல் அரசியல் மட்டத்திலிருந்து கூட நடவடிக்கைகளின் எடுக்கப்பட்டன. ஏற்றுமதி அபிவிருத்தி முயற்சிகள் சம்பந்தமாக அரசாங்கத்தினுடைய கடமைகளை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் சிறந்ததொரு நிறுவகப் பின்னணியை ஏற்படுத்துவதற்காக அரசியல் மட்டத்தில் 1979-ம் ஆண்டு 4-ம் இலக்க சட்டத்தின் பிரகாரம் அமைச்சர்களின் ஏற்றுமதி அபிவிருத்திக் கழகம், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை எனும் இரு நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. தலைவர்களின் ஆதரவில் கடமையாற்றும் அமைச்சர்களின் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையிடம் அபிவிருத்தி முயற்சிக்கு வழிகாட்டி நெறிப்படுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இவ் வமைச்சர்களின் ஏற்றுமதி அபிவிருத்திக் கழகத்தின் நிறைவேற்றுகரமாகச் செயற்படுகின்றது. அபிவிருத்திக் கொள்கைகள் சம்பந்தமாகச் சபைக்கு ஆலோசனை

வழங்குதல், ஏற்றுமதித் திட்டங்களை உருவாக்குதல், அவற்றினைக் கண்காணித்தல், ஏற்றுமதி அபிவிருத்திக்குப் பொறுப்பான பல்வேறு அரசாங்க நிறுவனங்களின் நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்துதல் போன்றவை இதனுடைய முக்கிய பணிகளாகும்.

### தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டம்

1982-ம் ஆண்டில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது அபிவிருத்தி கருதிய தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டமொன்றினைத் தயார் செய்திருந்தது. ஐந்து வருடங்களுக்கென உருவாக்கப்பட்ட இத் திட்டம் ஏற்றுமதிக்கான உற்பத்திகளை இனங் கண்டு, அவற்றுக்குப் பல்வேறு வழிகளிலும் ஊக்குவிப்பு வழங்குவதற்காக அரச, தனியார் துறைகளில் 12 பில்லியன் ரூபாவை முதலீடு செய்யத் தீர்மானித்திருந்தது.

### ஏனைய ஏற்பாடுகள்

ஏற்றுமதி நோக்குள்ள வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கும் நோக்குடன் 1978-ம் ஆண்டில் கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் ஸ்தாபிக்கப்பட்டமை இதனை நிர்மாணிக்கக் கொழும்பு பாரிய அபிவிருத்திக் குழு அமைக்கப்பட்டமை ஏற்றுமதி நோக்குள்ள செயற் திட்டங்களில் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியமை, முதலீடு செய்யும் நாடுகளுடன் முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தங்களையும் வரி நிவாரண ஒப்பந்தங்களையும் செய்தமை, வெளிநாடுகளில் முதலீட்டாளரை ஊக்குவிக்கும் இயக்கங்களை ஆரம்பித்தமை போன்றவை மரபு ரீதியற்ற ஏற்றுமதிகளின் மேம்பாட்டுக்கென எடுக்கப்பட்ட பல்வேறு வகையான முயற்சிகளாக இடம்பெற்றிருந்தன.

### வரிச் சலுகைகள்

இவை மட்டுமன்றி, ஏற்றுமதியாளர்க்கு வரிச் சலுகை வழங்குவதென 1972-ல் கொண்டுவரப்பட்ட தீர்மானம் 1977-ன் பின்னர் செயற் திறன் வாய்ந்ததாக அமைந்திருந்தது.

### ஏனைய ஊக்குவிப்புகள்

தெரிவு செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களுக்கு விசேட ஏற்றுமதி ஊக்குவிப்புச் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. நிதிச் சலுகைகளைவிடப் பொருட்களை அபிவிருத்தி செய்தல், சந்தைப்படுத்தல் போன்றவற்றினையும் மத்திய வங்கி, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத் தாபனம் என்பன செய்து வருகின்றன. நிதி, மூலதனம் சம்பந்தமாகப் பிரச்சனையினை எதிர்நோக்கும் ஏற்றுமதி உற்பத்திகளுக்கு மீள் நிதியீட்ட மானியங்களை வழங்குவதில் மத்திய வங்கியின் பங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

ஏற்றுமதியாளரை ஊக்குவிக்கும் வகையில் ஏற்றுமதித் துறையில் சாதனை புரிவோருக்கு ஜனாதிபதி விருது வழங்கும் திட்டம் ஒன்றும் 1981-ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. அதே போல GATT, unctad போன்ற சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் கைப்பணிப் பொருட்கள், றப்பர் உற்பத்திகள், ஆபரணங்கள் என்பவற்றினை உள்ளடக்கிய ஏழு உற்பத்தித் துறைகள் அடையாளம் காணப்பட்டு அவற்றின் அபிவிருத்திக்கும் மேம்பாட்டுக்கும் உதவி வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கிராமிய மட்டத்தில் ஏற்றுமதி உற்பத்திகளைத் தயாரிப்பதற்கேற்ற வகையில் ஏற்றுமதிக்கான மாதிரிக் கிராமம் ஒன்றும் தம்பதெனியாத் தொகுதியில் முதன்முதலாக உருவாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கிராமங்கள் தோறும் பல ஏற்றுமதிக் கிராமியக் கம்பனிகள் தோற்றம் பெற்றன. ஏற்றுமதி உற்பத்திகள் பற்றிய பிரச்சாரத்தைச் செய்யும் நோக்குடன் வர்த்தக கப்பற்படுத்தல் செய்திச் சேவையொன்றும் வர்த்தக கப்பற் துறை அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டது. இவை அனைத்தும் உலகச் சந்தையில் ஏற்றுமதியாளர் துணிவுடன் காலடி எடுத்து வைப்பதற்குப் பெரிதும் துணை புரியக் கூடியவையாக அமைந்திருந்தன.

### விளைவுகள்

இவற்றின் விளைவாக இலங்கையின் ஏற்றுமதி அமைப்பில் முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. நீண்ட காலமாகப் பொருளாதாரம் எதிர்பார்த்திருந்த ஏற்றுமதி பன்முகப்படுத்தலானது ஏற்படுவதற்குரிய வாய்ப்பு 1977-ன் பின் ஏற்பட்டிருந்தது. 1976-ம் ஆண்டில் பெற்றோலிய உற்பத்திகள் உட்பட மரபு ரீதியான ஏற்றுமதிகள் 82%மாக இருந்து 1986-ம் ஆண்டில் 49%ற்கு வீழ்ச்சியுற்றிருந்தது.

### 1982 — 87ம் ஆண்டுகளில் இலங்கையின் ஏற்றுமதி அமைப்பு

| அமைப்பு | 1982 | 83 | 84 | 85 | 86 | 87 |
|---|---|---|---|---|---|---|
| மரபு ரீதியான ஏற்றுமதிகள் | 62.7 | 62.6 | 65.5 | 59.4 | 48.9 | 44.5 |
| 1) பாரம்பரிய வேளாண்மை உற்பத்திகள் | 47.4 | 52.0 | 56.7 | 48.7 | 42.0 | 38.2 |
| 2) பெற்றோலிய உற்பத்திகள் | 15.3 | 10.6 | 8.8 | 10.7 | 6.9 | 6.3 |
| மரபு ரீதியற்ற ஏற்றுமதிகள் | 37.3 | 37.4 | 34.5 | 40.6 | 51.1 | 55.5 |

ஆதாரம்: மத்திய வங்கி மீளாய்வு அறிக்கை

இவ்வாறு மரபு ரீதியான ஏற்றுமதிகளின் பங்கானது வீழ்ச்சியடைந்து செல்வதற்குரிய முக்கியமான காரணமாகக் கூறக்கூடியது ஏனைய ஏற்றுமதிகள் மீது அதிக கவனம் செலுத்தப்பட்டமையே யாகும். இவ் வீழ்ச்சியை ஈடு செய்யும் வகையில் மரபு ரீதியற்ற ஏற்றுமதிகளால் கைத்தொழிற் பொருட்களின் பங்கு மிக வேகமாக உயர்வடைந்து சென்றுள்ளது 1976-ம் ஆண்டில் 11 சதவீதத்துக்கு வகை கூறிய பெற்றோலிய உற்பத்திகள் உட்பட்ட இலங்கையின் கைத்தொழில் ஏற்றுமதிகள் (மத்திய வங்கியின் கணிப்பீட்டின்படி மரபு ரீதியற்ற கைத்தொழில் ஏற்றுமதி 4% மட்டுமே) 1986-ம் ஆண்டில் பெற்றோலிய உற்பத்திகளைத் தவிர்த்து, 40 சதவீதமாக உயர்வடைந்திருந்தன இது 1987-ம் ஆண்டில் 42.3 சதவீதமாக மேலும் அதிகரித்துச் செல்லும் ஒரு போக்கினைக் கொண்டதாகவே காணப்படுகின்றது. இத்தகைய கைத்தொழில் ஏற்றுமதிகளில் முக்கியமானதாகக் குறிப்பிடக்கூடியது புடைவைகளும் ஆடைகளுமேயாகும். 1976 ம் ஆண்டின் மரபு ரீதியற்ற ஏற்றுமதிகளில் ஒரு சதவீதமாக மட்டுமே அமைந்து இருந்த புடைவைக் கைத்தொழில் ஏற்றுமதியானது எதிர்பாராத வகையில் மிகையானதொரு வளர்ச்சிக்குட்பட்டு 1987-ல் 31.4 சதவீதத்துக்கு வகை கூறியது.

## இலங்கையின் புடைவைக் கைத்தொழில் ஏற்றுமதி

| ஆண்டு | மொத்த ஏற்றுமதியின் சதவீதம் |
|---|---|
| 1976 | 1 |
| 1979 | 7.3 |
| 1980 | 10.3 |
| 1981 | 14.6 |
| 1982 | 16.3 |
| 1983 | 18.9 |
| 1984 | 20.5 |
| 1985 | 22.0 |
| 1986 | 28.3 |
| 1987 | 31.4 |

புடைவைக் கைத்தொழில் வேகமான வளர்ச்சியினை ஏற்படுத்தியதில் சுதந்திர வர்த்தக வலயத்தின் பங்கு அதிகமானதாகும். 1979-ல் உருவாக்கப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் அதிகளவில் கொண்டிருந்த முதலீடுகள் புடைவை ஆடைக் கைத்தொழில்களையே சார்ந்திருந்தன. இது தொடர்பாகக் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி யாதெனில் 1976-ம் ஆண்டில் 70 மில்லியன் ரூபாவாக இருந்த ஆடைகளின் ஏற்றுமதி வருமானம் 1986-ல் 9,620 மில்லியன் ரூபாவாகவும் 1987-ல் 12,897 மில்லியன் ரூபாவாக மிக அதிகளவில் வளர்ச்சியடைந்தமையே யாகும் அத்துடன் 1986, 87-ம் ஆண்டுகளில் இது வரை இலங்கைக்கு அதிகளவான அந்நியச் செலாவணியைத் தேடிக் கொடுத்துவந்த தேயிலையின் பங்கினை விஞ்சியதுடன் அந்நியச் செலாவணியைச் சேமிக்கும் மிகப் பெரும் தனியொரு விடயமாகவும் மாற்றமடைந்துள்ளது. இதற்குப் புறம்பான ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் மிகச் சிறியளவான உயர்வினையே பதிவு செய்திருந்தன.

### திறனாய்வு

1977-ல் பதவிக்கு வந்த புதிய அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட முயற்சிகளின் விளைவாக நீண்ட காலமாக இலங்கையின் ஏற்றுமதி அமைப்பில் காணப்பட்ட பண்பு மாறி மரபு ரீதியற்ற ஏற்றுமதிகள் ஒரு உயர்ந்த நிலைக்கு வந்துள்ளமையை 1987-ம் ஆண்டு வரையான மத்திய வங்கியின் தகவல்களிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது இத்தகைய சிறப்பு நிலை இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தினைப் பொறுத்தவரை மிக அவசியமாக வேண்டப்படுவதொன்றாகும். எனினும் இன்றைய ஏற்றுமதி அமைப்பினையும் அதன் மூலம் இலங்கைக்குக் கிடைக்கின்ற தேறிய நன்மையையும் நாம் நுணுகி நோக்குவோமாயின் அது மிகவும் வருந்தக்கூடிய ஒரு நிலையில் இருப்பதனையே காண முடிகின்றது

1. குவிப்பு

சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்து இலங்கைக்குப் பெருமளவான வருமானத்தினை ஏற்றுமதி மூலம் பெற்றுக் கொடுத்து வந்த பாரம்பரிய ஏற்றுமதிகளின் இடத்தினைக் கைப்பற்றி, கிட்டத்தட்ட 56% சதவீதத்துக்கு வகை கூறுபவையாக இருந்த மரபு ரீதியற்ற ஏற்றுமதிகள் திகழ்வதற்கு அடிப்படையானதாக விளங்கியது புடைவையும் ஆடைகளும் உற்பத்திகளே ஆகும். மரபு ரீதியற்ற ஏற்றுமதிகளில் இவற்றின் பங்கு கிட்டத்தட்ட 78 சதவீதமாகும்..

2. தேறிய வருமானம்

ஆனால் ஏற்றுமதிகளின் மூலம் இலங்கை உழைத்துக் கொள்ளக்கூடிய தேறிய வருமானமானது மிக மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றது. ஏனெனில் இவை பெருமளவுக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற மூலப்பொருட்களைக் கொண்டிருப்பதேயாகும். உள்ளீடுகள் எவ்வளவுக்கு இறக்குமதிகளைச் சார்ந்திருக்கின்றனவோ அந்தளவுக்குத் தேறிய விளைவும் குறைவடைந்து செல்வதாக இருக்கும். இலங்கையின் பெரும்பாலான கைத்தொழில்களும் இறக்குமதி செய்யப்பட்ட

உள்ளீடுகளிலேயே தங்கியிருப்பனவாயிருந்தாலும்கூட புடைவைகளும் ஆடைகளும் ஓரளவுக்கு முழுமையாகவே இறக்குமதிகளைச் சார்ந்துள்ளன எனலாம். உதாரணமாகப் புடைவை மற்றும் ஆடை உற்பத்தியானது 75 சதவீதமான உள்ளீடுகளுக்கு இறக்குமதிகளையே எதிர்பார்க்கின்றன. இதிலிருந்து இலங்கை பெற்றுக்கொள்ளுகின்ற தேறிய ஏற்றுமதி உழைப்பானது மிகக் குறைவாகவே காணப்படுகிறது. இந் நிலையில் இலங்கையின் மரபு ரீதியற்ற ஏற்றுமதிகள் பெருமளவுக்கு இறக்குமதிகளைச் சார்ந்திருக்கும் நிலையைக் குறைத்தால் மட்டுமே ஏற்றுமதி மூலமான முழு நன்மையினையும் அனுபவித்துக் கொள்ள முடியும்.

### 3. சந்தைப்படுத்தல்

உள்ளீடுகளை இறக்குமதி செய்வதன் மூலம் ஏற்படுகின்ற விளைவு ஒரு புறமிருக்க இவ் வுற்பத்திகளது சந்தையைப் பொறுத்த வரையிலும் பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அதாவது இலங்கையின் மரபு ரீதியற்ற பொருட்களின் முக்கியமான சந்தைகள் இவ்விறக்குமதிகள் மீது பங்கீட்டு (கோட்டா)க் கட்டுப்பாடுகளை அமுல் செய்துள்ளன. 1976-ம் ஆண்டு கோட்டா பற்றிய முதலாவது ஒப்பந்தம் நோர்வேயுடன் கைச்சாத்திடப் பட்டதனைத் தொடர்ந்து மேற்கைரோப்பிய நாடுகள், வட அமெரிக்க நாடுகள் பலவும் இக் கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டன. ஆரம்பத்தில் மிகச் சில வகையான ஆடைகள் மீது விதிக்கப்பட்ட இக் கட்டுப்பாடு மிக விரைவில் மக்களால் விரும்பப்படுகின்ற பெரும்பாலான தைத்த ஆடைகள் மீதும் கொண்டு வரப்பட்டன. இக் கட்டுப்பாடு ஆடைகளின் ஏற்றுமதியாளரிடையே பெரும் கவலையையும் அவநம்பிக்கையினையும் ஏற்படுத்தி வைத்துள்ளன. புடைவைகளும் ஆடைகளும் ஏற்றுமதி பொறுத்த இத்தகையதொரு நிலை உடுதுணிக் கைத்தொழிலின் நீண்ட கால வளர்ச்சியில் ஒரு பாரிய தாக்கத்தினை ஏற்படுத்திவிடும்.

### 4. ஏனைய ஏற்றுமதிப் பொருட்கள்

புடைவைக் கைத்தொழில் தவிர்ந்த ஏனைய மரபு ரீதியற்ற கைத்தொழில் ஏற்றுமதிகளை நோக்கின் அவை மிகக் குறைந்தளவான பங்கினை வகிக்கின்ற, சுதந்திர வர்த்தக வலயத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற நுகர் பண்டங்களாகவும் தயாரிப்புப் பொருட்களாகவுமே காணப்படுகின்றன. இவற்றினை இறக்குமதி செய்கின்ற நாடுகளின் சுவைகளில் ஏற்படுகின்ற மாற்றம் உற்பத்தியாளர்களிடையே தாக்கத்தினை ஏற்படுத்திவிடக் கூடும். இதிலிருந்து வெளியாகும் ஒரு உண்மை யாதெனில் 1977-க்குப் பிந்திய அரசாங்கத்தின் கொள்கையின் கீழும் இலங்கையின் கைத்தொழில் ஏற்றுமதிகள் திடமான ஒரு நேர்க்கணிய முன்னேற்றத்தினைக் காட்டக் கூடியதென்றோ அதன் வழி பொருளாதார அபிவிருத்திக்கு உதவியுள்ளதென்றோ கூறிவிட முடியாதென்பதேயாகும்.

1983-ம் ஆண்டில் இலங்கைக்கு வந்த உலக வங்கியின் கைத்தொழில் தூதுக் குழு இலங்கையினுடைய கைத்தொழிற் கொள்கைகளின் பூரணமற்ற தன்மையைச் சுட்டிக்காட்டி ஏற்றுமதித் தூண்டுதல்களை விரிவுபடுத்துதல், புதியனவற்றினை அறிமுகப்படுத்துதல், இறக்குமதித் தடைகளை மேலும் நீக்குதல் போன்ற பரிந்துரைகளை வலியுறுத்திச் சென்றதிலிருந்து இதனை மேலும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகின்றது. கைத்தொழில் ஏற்றுமதிகளுக்குப் புறம்பான கனிப்பொருட்கள், சிறு வேளாண்மைப் பயிர் ஏற்றுமதிகள் கூட மெச்சத்தக்க அதிகரிப்பெதனையும் அண்மைக் காலங்களில் ஏற்படுத்தி வைக்கவில்லை.

### முடிவுரை

இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகம் குறிப்பிடக் கூடியளவுக்குப் பொருளாதாரம் எதிர்பார்த்த வெற்றியினைத் தழுவிக் கொள்ளவில்லை பதிலாக, கடந்த காலங்களைப் போலவே நாடு முகம் கொடுத்த நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் வகையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளினால் ஏற்பட்ட உயர்வுகளாகவே இவை காணப்பட்டன. எனவே இதிலிருந்து விலகி, பொருளாதாரம் முழுவதனையுமே பாதிக்கின்ற அந்நியச் செலாவணிப் பிரச்சனைக்கு நிரந்தரமான பரிகாரம் ஒன்றினைக் காணும் வகையில் ஏற்றுமதி அமைப்பில் மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டியது அவசியமானதாகும். இவ் வேற்றுமதி அமைப்பானது கூடியளவுக்கு உள்நாட்டுப் பெறுமதியைக் கூட்டக்கூடிய ஏற்றுமதிப் பொருட்களைத் தன்னகத்தே கொண்டிருத்தல் மிக வேண்டப்படுவதொன்றாகும். இதற்கேற்ற வகையில் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் நோக்கிலான கொள்கைகளை மீளாய்வு செய்வது நாட்டின் அபிவிருத்தி சார்ந்த உத்திகளில் மிக இன்றியமையாததாகும்.

# இலங்கை வர்த்தக சம்மேளனம்
# CEYLON CHAMBER OF COMMERCE

உலகின் தொன்மையான வர்த்தக சம்மேளனங்களில் இலங்கை வர்த்தக சம்மேளனமும் ஒன்றாகும். இது 1839 மார்ச் மாதம் 25ஆம் திகதியன்று தோற்றுவிக்கப்பட்டது

இலாப நோக்கமோ, அரசியற் சார்போ கொண்டிராத இச் சம்மேளனம் வர்த்தக சமூகத்தின் நலனை மேம்படுத்தலையே தனது குறிக்கோளாகக் கொண்டதாகும். வாணிபத் துறையில் ஈடுபட்டோரின் சுய விருப்பாலான கூட்டு இதுவாகும். இதன் உறுப்பினர் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவோராகக் காணப்படுகின்றனர். ஏற்றுமதியாளர், விவசாயிகள், தயாரிப்பாளர், இறக்குமதியாளர், வங்கியாளர், வாடகைக் கொள்வனவுத் தொழிலர், சுற்றுலாத் துறையினர், கப்பற்படுத்துவோர், பொறியியற்றுறையினர், நிபுணத்துவ ஆலோசனை வழங்குவோர், சில்லறை வர்த்தகர், கணக்காய்வாளர், கணக்கியல் அறிஞர், தரகர், குத்தகைக்கு விடுவோர், நிர்மாணத் தொழிலை மேற்கொள்வோர் போன்ற பல்வேறு துறையினர் இச் சம்மேளனத்தின் உறுப்பினராக உள்ளனர். இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் 80 சதவீதமானவற்றை இச் சம்மேளனத்தின் உறுப்பினரே கையாண்டு வருகின்றனர்.

இச் சம்மேளனம் பல்வேறு அமைப்புக்களில் உறுப்புரிமை கொண்டுள்ளன. அவற்றுட் சில:

1. இலங்கை வர்த்தகம், கைத்தொழிலுக்கான சம்மேளனங்களின் கூட்டு
2. சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் இலங்கைத் தேசிய குழு.
3. வர்த்தக கப்பற்றுறை அமைச்சின் சர்வதேச வர்த்தகத்துக்கான ஆலோசனைக் குழு.
4. ஜனாதிபதி ஏற்றுமதி விருது பெறுவோரைத் தேர்ந்தெடுக்குங் குழு.
5. இலங்கை கப்பற்படுத்துவோர் குழு.
6. வர்த்தக சேவை நலன்புரிச் சங்கம்
7. ஹென்டகன் நம்பிக்கை நிதியம்
8. இலங்கை தர நிர்ணய நிறுவகத்தின் தர உறுதிப்பாட்டுக் குழு.
9. கொழும்புத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஒருங்கிணைப்புக் குழு.
10. கொழும்புத் துறைமுக கப்பற் கேள்வு தொடர்பான தொழிற்படு குழு – வர்த்தக தரவுகள் பரிவர்த்தனை நிலையம்.
11. இலங்கை வர்த்தக வசதிப்படுத்தல் குழுவின் (SRILPRO) வான் சரக்கு வழமைகளும் நடைமுறைகளுந் தொடர்பான துணைக் குழு.

இச் சம்மேளனத்தின் முயற்சியால் தொழின் முறையான பல்வேறு நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டன. 1894இல் தோற்றுவிக்கப்பட்ட கொழும்பு தேயிலை வர்த்தகர் சங்கமும் அதனைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட கொழும்பு இறப்பர் வர்த்தகர் சங்கம், தெங்கு உற்பத்திகள் ஏற்றுமதியாளர் சங்கம், கொழும்பு தரகர் சங்கம், இலங்கை வங்கியாளர் சங்கம், நிதியகங்கள் சங்கம், உல்லாசப் பயணத் துறையினர் சங்கம், அருங்கற்கள் வியாபாரிகள் சங்கம், ஆடை ஏற்றுமதியாளர் சங்கம், தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதம முகவர்கள் சங்கம் என்பவை இவற்றுட் சிலவாகும்.

இச் சம்மேளனம் கொழும்பு தேயிலை ஏல விற்பனவை மேற்கொண்டு வருகின்றது. இதுவே உலகில் நடாத்தப்படும் மிகப் பெரும் ஏலவிற்பனவாகும். லண்டன் ஏல விற்பனவைவிட மும்மடங்கு புரள்வு இங்கு இடம்பெறுகின்றது. கொழும்பு இறப்பர் ஏல விற்பனவும், வாசனைத் திரவிய ஏல விற்பனவும் இச் சம்மேளனத்தாலேயே கையாளப்படுகின்றன. அருங்கற்கள் ஏல விற்பனவை மாதம் இருமுறை இச் சம்மேளனம் நடாத்துகின்றது.

அண்மைக் காலங்களில் ஏற்றுமதி மேம்பாடு, முதலீட்டு மேம்பாடு, வர்த்தகத் தகவல்களை வழங்குதல் என்பவற்றில் இச் சம்மேளனம் அதிக அக்கறை காட்டி வந்துள்ளது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் நெருக்கமாகச் செயற்படுவதன் மூலம் சம்மேளனம் ஏற்றுமதி மேம்பாட்டுக்கும் உதவிவருகின்றது. 1975இல் தேசிய ஏற்றுமதி விருதுத் திட்டத்தை முன்வைத்தது இச் சம்மேளனமேயாகும். அரசாங்கம் இத் திட்டத்தை அங்கீகரித்து அதனைச் செயற்படுத்தும் பணியையும் சம்மேளனத்திடம் ஒப்படைத்தது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அமைக்கப்படும் வரை

இப் பணியைச் சம்மேளனமே ஆற்றி வந்தது. தற்போதும் விருதுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் இச் சம்மேளனத்துக்கு உறுப்புரிமை உண்டு.

ஏற்றுமதி மேம்பாட்டுச் செயலகத்துடன் இணைந்து 1973 – 75 காலப் பகுதியில் இச் சம்மேளனம் இரு சர்வதேச கண்காட்சிகளையுங் கொழும்பில் நடாத்தியது.

யப்பான், கொரியா, பின்லாந்து, சுவீடன், நோர்வே, டென்மார்க் ஆகிய நாடுகளில் ஏற்றுமதி, முதலீடு என்பவற்றை ஊக்குவிக்கும் நோக்குடன் இச் சம்மேளனம் இரு புடை நாட்டுக் குழுக்களை (bi-lateral country Councils) அமைத்துள்ளது. இந் நாடுகளிலிருந்து வர்த்தகத் தூது கோஷ்டிகளைத் தருவித்துள்ளதுடன் அவற்றுக்கு எமது வர்த்தகத் தூது கோஷ்டிகளை அனுப்பியும் வருகின்றது. இவ் வகையில் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக் குழு, அந்நிய முதலீட்டு மதியுரைக் குழு, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, வர்த்தக கப்பற்றுறை அமைச்சு ஆகியவற்றின் பணிகட்கு இச் சம்மேளனம் பெருந் துணைபுரிந்து வருகின்றது.

ஒவ்வோராண்டும் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட முன்னர் தனது உறுப்பினரின் கருத்துக்களைப் பெற்று அரசாங்கத்துக்குத் தனது ஆலோசனைகளை இச் சம்மேளனம் வழங்கி வருகின்றது.

உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விலைகளைப் பிரசுரிக்கும் பணியை இச் சம்மேளனம் 1939 முதற் கொண்டு மேற்கொண்டு வருகின்றது. 1856 முதல் 1939 வரை இச் சம்மேளனம் சட்ட சபைக்கு உறுப்பினர் ஒருவரை நியமிக்குந் தகைமை கொண்டிருந்தது. இலங்கையின் பிரதான துறைமுகமாகக் கொழும்பு அமைய வேண்டுமென 1869இல் சம்மேளனம் அரசுக்குப் பரிந்துரை செய்தது. இல்லாவிடின் காலியே இலங்கையின் முக்கியமான துறைமுகமாக அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கும்.

பாடசாலைகளில் கணக்குப் பதிவியல் ஒரு பாடமாகப் போதிக்கப்படல் வேண்டுமென 1886 முதற் கொண்டே இச் சம்மேளனம் வற்புறுத்தி வந்துள்ளது. 1907இல் தொழினுட்பக் கல்லூரியில் வர்த்தக பாட போதனை தொடங்கியமைக்கும், 1909இல் நான்கு முன்னணிப் பாடசாலைகளில் வர்த்தகக் கல்வி ஆரம்பிக்கப்பட்டமைக்கும் இச் சம்மேளனத்தின் வற்புறுத்தல் காரணமாக அமைந்தது. இக் கற்கை நெறிகட்கான பரீட்சைகளையுஞ் சம்மேளனமே நடாத்தி வந்தது.

சம்மேளனத்தின் வேண்டுகோளுக்கு இணங்க 1883இல் துறைமுகக் குழுவொன்று அமைக்கப்பட்டது. சம்மேளனத்தின் தலைவர் இக் குழுவின் உறுப்பினருள் ஒருவராகப் பணியாற்றுமாறு அழைக்கப்பட்டார். தற்போதும் கொழும்புத் துறைமுகத்தின் அபிவிருத்திக்கான ஒருங்கிணைப்புக் குழுவில் சம்மேளனத்துக்கு உறுப்புரிமை உள்ளது.

1894 வரை கொழும்பு மாநகரின் தொலைபேசிச் சேவை தனியாராலேயே நிர்வகிக்கப்பட்டது. சம்மேளனத்தின் வேண்டுகோளுக்கு இணங்கவே இச் சேவை அரசாற் பொறுப்பேற்கபட்டது.

நாட்டின் பல்வேறு பொருளாதார நிகழ்வுகளுடன் இறுக்கமாகத் தன்னைப் பிணைத்திருக்கும் இச் சம்மேளனம் இவ் வாண்டு தனது 150 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றது.

## வைரங்களைப் பட்டை தீட்டி மெருகேற்றல்

வைரக் கற்களைத் தருவித்து அவற்றுக்குப் பட்டை தீட்டி மெருகேற்றும் தொழில் அதிகளவு அந்நியச் செலாவணியை உழைத்துத் தரும் தொழிலாக அபிவிருத்தியடைந்து வருகின்றது. சிலிங்கோ தொகுதிக் கம்பனிகளில் ஒன்றான புளு டைமண்ட்ஸ் லிமிட்டட் (Blu Dimonds Ltd.) இத் துறையில் முதன் முதலாக ஈடுபட்ட நிறுவனமாகும். 900 ஊழியர்களைப் பணிக்கமர்த்தும் உலகின் மிகப் பெரிய தொழிற்சாலை இவர்களின் உடைமையாக உள்ளது. சுதந்திர வர்த்தக வலயத்தில் இத் தொழிலுக்கென இரு தொழிற்சாலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மூன்றாவது தொழிற்சாலையை அமைப்பதற்கும் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக் குழு தனது அனுமதியை வழங்கியுள்ளது.

சிறப்புக் கட்டுரை – 2

# இலங்கையின் மாறிவரும் ஏற்றுமதி அமைப்பும் ஏற்றுமதி மேம்பாட்டுக்கென அரசாங்கம் வழங்கிவரும் ஊக்குவிப்புக்களும்

# CHANGING EXPORT STRUCTURE OF SRI-LANKA AND THE INCENTIVES PROVIDED BY THE GOVERNMENT FOR EXPORT PROMOTION

க. கேதீஸ்வரன், B. Com. (Hons.)
ஆசிரியர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

## முகவுரை

இலங்கையின் அந்நியச் செலாவணி வருமானத்தின் பிரதான மூலமாக அமைவது ஏற்றுமதி வர்த்தகம் ஆகும். இங்கு ஏற்றுமதி வர்த்தகம் எனும் போது உள்நாட்டில் செயப்பட்ட பொருட்களைப் பிற நாட்டுக்கு விற்பனை செய்வதையே நாம் கருதுகின்றோம். அண்மைக் காலத்தில் இலங்கையின் ஏற்றுமதி அமைப்பில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளன. இந்த மாற்றங்களுக்கு அரசாங்கம் வழங்கி வரும் ஏற்றுமதி மேம்பாட்டு ஊக்குவிப்புகளும் பெருமளவில் காரணிகளாக அமைந்துள்ளன. ஏற்றுமதி அமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை விளக்குவதும் ஏற்றுமதி மேம்பாட்டுக்காக அரசாங்கம் வழங்கிவரும் பல்வேறு ஊக்குவிப்புகளையும் நோக்குவதுமாகவே இக் கட்டுரை அமைகின்றது.

## ஏற்றுமதி அமைப்பு

இலங்கையின் ஏற்றுமதி அமைப்பினை மரபு ரீதியான பொருட்களின் ஏற்றுமதி, மரபு தழுவாத பொருட்களின் ஏற்றுமதியென இரண்டாக வகுக்கலாம். இலங்கை மத்திய வங்கி ஏற்றுமதிப் பொருட்களைப் பின்வருமாறு பாகுபடுத்தி வருகின்றது:-

1. விவசாயப் பொருட்கள்
2. கைத்தொழிற் பொருட்கள்
3. கனிப் பொருட்கள்
4. ஏனையவை

இலங்கையின் அண்மைக் கால ஏற்றுமதிப் போக்கினைப் பின்வரும் அட்டவணை கொண்டு விளக்கலாம்:

ஏற்றுமதி அமைப்பு

| வகை | மொத்த ஏற்றுமதியின் சத வீதம் | | |
|---|---|---|---|
| | 1985 | 1986 | 1987 |
| வேளாண்மைப் பொருட்கள் | 52.5 | 46.3 | 42.4 |
| கைத்தொழிற் பொருட்கள் | 39.5 | 46.6 | 48.6 |
| கனிப் பொருட்கள் | 2.4 | 3.5 | 4.3 |
| ஏனையவை | 5.6 | 3.7 | 4.7 |

மூலம்: மத்திய வங்கி ஆண்டறிக்கை 1987

எண்பதுகளின் நடுப்பகுதி வரை எமது மொத்த ஏற்றுமதி வருவாயில் வேளாண்மைப் பொருட்கள் மிகப் பெரும் இடத்தை வகித்து வந்தன. 1973இல் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 83 சத வீதமானவை வேளாண் பொருட்களிலிருந்தே பெறப்பட்டன. இந்த வீதம் ஆண்டு தோறும் வீழ்ச்சியுற்று 1979இல் 70.7 சத வீதமாக அமைந்தது. 1982இல் இது 54.3 சத வீதமாக மேலும் வீழ்ச்சியுற்றது. 1982, 83 ஆகிய இரு ஆண்டுகளிலும் இவற்றின் பங்கு மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியது. ஆனால் 1985 முதற் கொண்டு மீண்டும் வீழ்ச்சிப் போக்குக் காணப்படலாயிற்று. 1986இல் வேளாண் பொருட்களின் சத வீதப் பங்கு 46.3 ஆகவும் கைத்தொழிற் பொருட்களின் பங்கு 46.6 சத வீதமாகவும் அமைந்தது. கைத்தொழிற் பொருட்களின் பங்கு வேளாண் பொருட்களின் பங்கை விஞ்சிய முதற் சந்தர்ப்பம் இதுவே. வேறுபாடு மிக நுண்ணியதாக அமைந்தமையால் இது தற்காலிகமானதோ எனவும் ஐயுறப்பட்டது. ஆனால் 1987இல் வேளாண் பொருட்களின் பங்கு 42.4 சத வீதமாகவும் கைத்தொழிற் பொருட்களின் பங்கு 48.6 சத வீதமாகவும் அமைந்து மாறிவரும் பண்பின் அறிகுறி என்ற முடிவுக்கு எம்மை இட்டுச் செல்வதாக அமைந்தது.

### மாற்றமும் காரணங்களும்

1986இல் ஏற்றுமதி வருவாய் 1985இன் 36,207 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும் போது 34,072 மில்லியனாக அமைந்து ரூபாய் நியதிகளில் 6சத வீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. சிறப்பு எடுப்பனவு நியதி (சிஎநி)களின்படி இவ் வீழ்ச்சி 21 சத வீதமாகும். 1985இலும் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. ஆனல் அதன் பரிமாணம் முறையே 3 சத வீதம், 8 சத வீதம் என மட்டுமே அமைந்திருந்தது.

இவ்விரு ஆண்டுகளிலும் வேளாண்மைப் பொருள் ஏற்றுமதி வருவாய் குறைவுற்றமையே மொத்த ஏற்றுமதி வருவாய் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. எமது உற்பத்தியின் அளவு சந்தை விலைகளில் தாக்கத்தை ஏற்படுத்த இயலாதிருக்கும் நிலையில் சர்வதேச சந்தை விலைகள் இப் பொருட்களின் ஏற்றுமதி வருவாயை நிர்ணயிக்கும் காரணிகளாக அமைகின்றன. இதன் விளைவாக உற்பத்தி அல்லது ஏற்றுமதி அளவு குறைவுற்ற போதும் விலைகளின் அசைவு சாதகமாக அமையும் வேளைகளில் ஏற்றுமதி வருவாய் அதிகரிப்பதும், உற்பத்தி அல்லது ஏற்றுமதி அளவு கூடிய போதும் விலைகளின் அசைவு பாதகமாக அமைவதனல் ஏற்றுமதி வருவாய் குறைவுறுவதும் இயல்பே. இந்த வகையில் 1985 இல் தெங்குப் பொருள் தவிர்ந்த ஏனைய பிரதான வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தியில் மட்டுமின்றி அவற்றின் சர்வதேச விலைகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. இதனல் ஏற்றுமதி வருவாய் பாதிப்புக்குள்ளானது. மறு புறத்தில் தெங்குப் பொருட்களின் ஏற்றுமதி அளவு 185 சத வீதத்தால் அதிகரித்த போதிலும் விலையில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சியால் வருமான அதிகரிப்பு 46 சத வீதமானதாக மட்டும் அமைந்தது. 1986இல் எனின் தேயிலை, தெங்குப் பொருட்கள் என்பவற்றின் ஏற்றுமதி அளவு அதிகரித்த போதும் விலைகளில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சியால் ஏற்றுமதி வருவாய் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. 1987இல் ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் சாதகமாக அமைந்த போதிலும் ஏற்றுமதி அளவுகள் குறைவுற்றமையால் ஏற்றுமதி வருவாய் வீழ்ச்சியுற்றது. ரூபாய் நியதிகளில் விலையை ஏற்றுமதிப் பொருட்களால் பெறப்பட்ட வருவாய் 11 சத வீத அதிகரிப்பைக் காட்டிய போதிலும் (சிஎஉ) நியதிகளில் 5 சத வீத வீழ்ச்சியையே பதிவு செய்தது. விலைகளின் சாதகமான அசைவும், ஏற்றுமதி அளவின் அதிகரிப்பும் ஒரே வேளையில் நிகழுமாயின் ஏற்றுமதி வருவாய் அதிகரிக்க இடமுண்டு ஆனல் இவை இரண்டும் வெகு அபூர்வமாகவே சம்பவிக்கின்றன.

மறு புறத்தில் வேளாண் பொருட்களின் உற்பத்தி கால நிலையால் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது மேலும் விலைகளின் அசைவுக்கு ஏற்ப உற்பத்தி அளவைக் குறுகிய காலத்தில் மாற்றியமைக்க முடியாத நிலையும் உள்ளது. எனவே வேளாண் பொருட்களின் ஏற்றுமதி வருமானம் தளம்பலுக்கு உட்படுவது இயல்பானதே.

### அண்மைக் காலப் போக்குகள்

இவ்வகையில் வேளாண் பொருட்களுக்கான மொத்த ஏற்றுமதி வருவாய் 1985இல் 19,026 மில்லியன் ரூபாய்களிலிருந்து 1986இல் 15,764 மில்லியன் ரூபாய்களாக வீழ்ச்சியுற்றது. இது 17 சத வீத வீழ்ச்சிக்குச் சமமானதாகும். இதற்கு முந்திய ஆண்டிலும் 16 சத வீத வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. அதே நேரத்தில் 1985இல் 4 சத வீதத்தால் அதிகரித்த கைத்தொழில் ஏற்றுமதி வருவாய் 1986இல் 7 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இப் பண்பு ஏற்றுமதிகளின் வீழ்ச்சிப் போக்கினை எடுத்துக் காட்டுவதாகக் கொள்ளப்படலாம். கைத்தொழிற் பொருட்களின் ஏற்றுமதி வருவாயில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பெற்றோலிய ஏற்றுமதிகளின் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும்.

எனினும் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 1986இல் ஏற்றுமதித் துறையில் உற்சாகமூட்டுஞ் சில பண்புகளும் காணப்பட்டன. 1985இல் தயாரித்த ஆடை ஏற்றுமதியால் பெறப்பட்ட வருவாய் வீழ்ச்சியுற்றிருந்தது. வளர்ச்சி பெற்ற நாடுகள் சந்தைக் காப்பீட்டு விரகுகளைத் (Protective Policy) தீவிரமாகக் கைக்கொண்ட போதிலும் 1986இல் இவற்றின் ஏற்றுமதி வருவாய் 2 சத வீதத்தால் அதிகரித்தது. மரபு வழியற்ற பொருட்களாற் கிட்டிய ஏற்றுமதி வருவாய் 1985இல் 13 சத வீத வளர்ச்சியை மட்டுமே அடைந்திருந்தது. இவ் வளர்ச்சி வீதம் 1986இல் 83 சத வீதமானதாக அமைந்து தெளிவான வளர்ச்சிப் போக்கைக் காட்டியது.

இதே வேளையில் மொத்த ஏற்றுமதி வருவாயில் வேளாண் பொருட்களின் சத வீதப் பங்கு 1985இல் 52 இலிருந்து 1986இல் 46ஆகக் குறைவடைந்தது. மொத்த ஏற்றுமதிகளில் இதன் விளைவாக மொத்த ஏற்றுமதிகளில் பெருந் தோட்டப் பயிர்த் துறையின் பங்கு 49 சத வீதத்திலிருந்து 42 சத வீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது. இதனை ஈடு செய்யும் வகையில் தயாரித்த ஆடைகள் உட்பட கைத்தொழில் ஏற்றுமதி வருவாயின் சத வீதப் பங்கு 40 லிருந்து 47 ஆக அதிகரித்தது.

1987இல் வேளாண் பொருட்களின் ஏற்றுமதி வருவாய் 17,437 மில்லியன் ரூபாய்களாகும். 1986இல் 15,764 மில்லியன் ரூபாய்கள் மட்டுமே ஈட்டப்பட்டிருந்தது. இந்த வகையில் 1987இல் ஏற்பட்ட அதிகரிப்பு 14 சத வீதத்துக்குச் சமமானதாகும். எனினும் (சிஎஉ.) நியதிகளில் அதிகரிப்புக்குப் பதிலாக வீழ்ச்சியே காணப்பட்டது கோப்பி, கராம்பு, ஏலக்காய் என்பவற்றின் வருவாய்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்ட வேளையில் மிளகு, கறுவா, பழங்கள், முந்திரிப் பருப்பு என்பவற்றில் கணிசமான அதிகரிப்புக் காணப்பட்டது.

கைத்தொழில் வருவாய் 1986இல் 15,878 மில்லியன் ரூபாய்களிலிருந்து 1987இல் 20,004 மில்லியனுக 9 சத வீத அதிகரிப்பைக் காட்டியது. இந்த அதிகரிப்புடன் மொத்த ஏற்றுமதியில் இவ் வகுதியின் பங்கு 49 சத வீதத்துக்கு உயர்ந்தமையால் 1986இல் ஈட்டப்பட்ட நுண்ணிய பேதம் 1987இல் வலுவான பண்பாக மாறியமைந்தது. இவ்வாண்டிலேயே இது வரை முதன்மை இடத்தைக் கைப்பற்றியிருந்த வேளாண் பொருட்களின் ஏற்றுமதிப் பெறுமதியைக் கைத்தொழில் ஏற்றுமதிகள் விஞ்சின. கைத்தொழிற் பொருட்களில் ஆடைகள் ஏற்றுமதியால் கிட்டிய வருவாய் 1986இல் 9,629 மில்லியன் ரூபாய்களிலிருந்து 1987இல் 12,897 ஆக அதிகரித்தது 16 சத வீதங் கொண்ட இந்த அதிகரிப்பு கைத்தொழிற் பொருட்களின் சத வீதப் பங்கின் அதிகரிப்புக்குக் காரணமாய் அமைந்தது. இது தவிர்ந்த ஏனைய கைத்தொழிற் பொருட்களின் ஏற்றுமதி வருவாய் 4,515 மில்லியன் ரூபாய்களாக அமைந்து 16 சத வீத வளர்ச்சியைக் காட்டிய போதும் (சிஎஉ.) நியதிகளில் முன்னைய ஆண்டைப் போலவே ஏறத்தாழ 118 மில்லியனுக அதே மட்டத்தில் காணப்பட்டன.

இது, எமது ஏற்றுமதிக் கட்டமைப்பு கைத்தொழிற் துறையை நோக்கி நகர்வதற்கான வலுவான எடுத்துக்காட்டாகும். கைத்தொழில் ஏற்றுமதிகளை அதிகரிப்பதன் மூலம் எமது ஏற்றுமதி வருமானத்தையும், அந்நியச் செலாவணிச் சம்பாத்தியத்தையும் பெருக்கும் நோக்குடன் அரசாங்கம் பல தரப்பட்ட நடவடிக்கைகளைக் காலத்துக்குக் காலம் எடுத்து வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்த அடிப்படையில் அரசாங்கம் மேற்கொண்ட பல்வேறு மேம்பாட்டு நடவடிக்கைகளைத் தொகுத்து நோக்குவோம்.

### மேம்பாட்டு நடவடிக்கைகள்

பல்வேறு மேம்பாட்டு நடவடிக்கைகளைப் பின்வருமாறு வகுக்கலாம்.

1. கொள்கை ரீதியான மாற்றங்கள்
2. நிறுவன ரீதியான ஆதரவு
3. நிவாரணங்கள்
4. ஊக்குவிப்புகள்

### கொள்கை ரீதியான மாற்றங்கள்

இவற்றுள் பிரதானமானது **ஏற்றுமதியைப் பன்முகப்படுத்தும் திட்டமாகும்.** காலத்துக்குக் காலம் பதவிக்கு வந்த வெவ்வேறு அரசாங்கங்கள் இத் திசை நோக்கிய பல நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் தற்போதய அரசு இதற்கு முதன்மை வழங்கியுள்ளது.

1960களில் இலங்கையின் ஏற்றுமதி வருமானம் பாதக நிலையை அடைந்த போது மரபு தழுவிய ஏற்றுமதிப் பொருட்களான தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்திகள். வாசனைத் திரவியங்கள் என்பவை தவிர்ந்த ஏனைய பொருட்களை ஏற்றுமதி செய்ய வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது. ஏற்றுமதியைப் பன்முகப் படுத்தலின் முதற் படியாக இது கருதப்படலாம். இச் செயன் முறையைப் பொருள் ரீதியாகப் பன்முகப் படுத்தல், சந்தை ரீதியான பன்முகப் படுத்தல் என இரண்டாக வகுக்கலாம். பன்முகப்படுத்தல் என்ற எண்ணக் கரு இவ்வாறு வளர்ச்சியடைந்தமையைத் தொடர்ந்து மரபு ரீதியற்ற புதிய பொருட்களின் ஏற்றுமதிக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டது. 1977இல் பதவிக்கு வந்த அரசாங்கம் இதில் தீவிர அக்கறை காட்டிய போதும் 1980இன் பின்னரே பன்முகப்படுத்தல் உச்சக் கட்டத்தை அடைந்தது. இதன் விளைவாக எமது ஏற்றுமதி வருவாய் படிப்படியாக அதிகரிக்கலாயிற்று. ஏற்றுமதி வருவாய் அதிகரிப்பின் நீண்ட காலப் போக்கு பன்முகப்படுத்தற் கொள்கைகளின் வெற்றியை எடுத்தியம்புகின்றது. 1976க்கும் 1986க்கும் இடையே மொத்த ஏற்றுமதி வருவாயில் மூன்று முக்கிய மரபு வழிப் பயிர்களின் சத வீதப் பங்கு 72இலிருந்து 42க்கு வீழ்ச்சியுற்ற வேளையில் கைத்தொழில் ஏற்றுமதிகளின் பங்கு 15இலிருந்து 47 ஆக அதிகரித்தது. இத் தொடர்பில் தயாரித்த ஆடைகள் ஏற்றுமதி 1976இன் 700 லட்சம் ரூபாவிலிருந்து 1986இல் 9,629 மில்லியனுகவும் 1987இல் 12,897 மில்லியனுகவும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதாவது இக் காலப்பகுதியினுள் மொத்த ஏற்றுமதியில் இப் பொருட்களின் சத வீதப் பங்கு ஒன்றிலிருந்து 34 ஆக அதிகரித்துள்ளது. இது மரபு ரீதியற்ற பொருட்களை நோக்கிய பன்முகப்படுத்தலின் வெற்றியை எடுத்துக் காட்டுகின்றது.

### நிறுவன ரீதியான ஆதரவு

ஏற்றுமதி மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு பல்வேறு நிறுவன ரீதியான அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றுட் பிரதானமானவை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், ஏற்றுமதி உற்பத்திக் கிராமங்கள் என்பவையாகும்.

ஏற்றுமதி ஊக்குவிப்புச் செயலகம் என்ற பெயரில் உருவாக்கப்பட்ட அமைப்பு நாட்டின் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கவும், அபிவிருத்தி செய்யவுமென 1979ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் கீழ் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையாக மாற்றியமைக்கப்பட்டது. இச் சபை வர்த்தக கப்பல் துறை அமைச்சின் கீழ் தொழிற்படுகின்றது. தேசிய ஏற்றுமதிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல், அதற்கு ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பவை இச் சபையின் பிரதான நோக்கங்களாகும்; எனவே ஏற்றுமதி தொடர்பான அனைத்து விடயங்களையும் கையாளும் குவிவு மையமாக இச் சபை செயலாற்றுகின்றது. இச் சபை மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளை விளக்கப்புகின் இக் கட்டுரை மிக நீண்டதாகிவிடும். விரிவஞ்சி, அவற்றுட் சில மட்டுமே இங்கு ஆராயப்படுகின்றன.

1983 – 87க்கு இடைப்பட்ட ஐந்தாண்டுக் காலப் பகுதியில் 12,000 மில்லியன் ரூபாய் முதலீடும் 11 சத வீத சராசரி ஆண்டு வளர்ச்சியும் அடைவதென்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு வகுக்கப்பட்ட திட்டமே தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டமாகும். எனினும் மரபு வழி ஏற்றுமதிகளின் வருவாய் வீழ்ச்சியால் வளர்ச்சி வீதம் குறைவானதாகவே அமைந்தது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இத் திட்டத்தைத் தொடர்ந்து மீளாய்வு செய்து அபிவிருத்தி ஏற்படுத்தப்பட வேண்டிய துறைகளை இனங்கண்டுள்ளது.

ஏற்றுமதிகக்கு நிதியீட்டஞ் செய்வது இச் சபையின் உதவித் திட்டங்களில் ஒன்றாகும். சபையின் இச் செயற்பாட்டை இரண்டாக வகுக்கலாம். அவை யாவன:–

1. ஏற்றுமதிச் செயற் திட்டங்களுக்கான குறுங் காலக் கடன்களை வழங்குதல்.
2. அவற்றின் மூலதன ஒப்புரவில் பங்கேற்றல், (Equity Participation).

நடுத்தர, நீண்ட காலக் கொடு கடன் நிதியத்தினூடாக ஏற்றுமதியாளர் சலுகை அடிப்படையில் தமது செயற் திட்டங்களுக்குக் கடன்களைப் பெற்றுக் கொள்ள சபை துணைபுரிகின்றது. 1986இல் 35 மில்லியன் ரூபா மொத்த முதலீட்டினைக் கொண்ட நான்கு செயற் திட்டங்களுக்குச் சபை ஒப்புதலளித்தது. இதில் 17 லட்சம் ரூபா கடன் தொகையாகும்.

இது மட்டுமின்றி, ஏற்றுமதி சார்ந்த முயற்சிகளின் பங்கு மூலதனத்தில் 30 சத வீதம் வரை சபை பங்கேற்கின்றது. 1986இல் நான்கு செயற்திட்டங்களில் 5 மில்லியன் ரூபா பெறுமதியான பங்குகளைக் கொள்வனவு செய்தது.

சிறிய ஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பதற்காக அவர்களின் முதலீட்டில் 80 சத வீதம் வரை வட்டியில்லாக் கடன் வடிவில் நேரடி நிதி உதவி வழங்கப்படுகின்றது. உற்பத்தி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் (Product Development Projects) மேற்கொள்ளப்படுகின்றன. நலிவடைந்த ஏற்றுமதி சார்ந்த செயற்றிட்டங்களைப் புத்தாக்கம் செய்வதற்காக நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன. இவை யாவும் சபையின் விதந்துரைப்பின் பேரிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சிகளில் பங்கு கொள்ளல், உள்ளூரிலும், பிற நாட்டிலும் வர்த்தகக் குழுக்களுக்கு ஆதரவளித்தல், சந்தை வள ஆய்வுகளை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் மூலமாகவும் சபை சந்தை ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

ஏற்றுமதிகட்குத் தூண்டுகோல்களை வழங்குவதற்கும், அவர்கட்கு ஏற்படக்கூடிய இடர்களுக்கு எதிராகக் காப்பீட்டை வழங்குவதற்குமாக ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 1979இல் அமைக்கப்பட்டது. பாதகமான பன்னாட்டுப் பொருளாதார சூழ்நிலையில் இக் கூட்டுத்தாபனம் ஏற்றுமதியாளருக்குப் பெருந்துணையாக உள்ளது. குறிப்பாக வெளிநாட்டுச் செலாவணி வருவாய் வீழ்ச்சியுற்றுள்ளலத்தீன் அமெரிக்க, ஆபிரிக்க, மத்திய கிழக்கு நாடுகட்கு ஏற்றுமதி செய்யும்போது ஏற்படக்கூடிய மாற்றல் தாமதங்கள் (Transfer Delays) பணஞ் செலுத்தற் தவறுகள் (Defaults) என்பவற்றால் ஏற்றுமதியாளர் எதிர்கொள்ளும் இடர்கட்கு எதிரான கவசத்தை இக் கூட்டுத்தாபனம் வழங்குகின்றது. மேலும் அபிவிருத்தியடைந்த நாடுகளில் கூட்டு நிலையங்கள் வேகமாக ஒன்றிணைக்கப்பட்டு (Merger) வருவதனால் ஏற்படக் கூடிய இழப்புகளும் இக் கூட்டுத்தாபனத்தால் எதிர்கொள்ளப்படுகின்றன. அரசியற் சிக்கல்களாலும் பாதகமான சூழ்நிலைகள் ஏற்பட்டன. இவற்றுக்கு எதிராக எதிர் நீச்சலிடவும் கூட்டுத்தாபனத்தின் திட்டங்கள் பெருந் துணை புரிந்தன.

இக் கூட்டுத்தாபனத்தின் தொழிலை இரு பெரும் பிரிவுகளாக வகுக்கலாம். அவையாவன:-

1. ஏற்றுமதிக் கொடுப்பனவுக் காப்புறுதிப் பூட்கைகள்.
2. கொடுகடன் உத்தரவாதங்கள்.

இவ்விரு வகைப் பணிகளாலும் ஏற்றுமதியாளர் நம்பிக்கையுடன் ஏற்றுமதி செய்யவும் வர்த்தக வங்கிகளிடமிருந்து தாராளமாக நிதியைப் பெற்றுக்கொள்ளவும் வழிவகுக்கின்றன.

இவற்றுள் **காப்புறுதிப் பூட்கைகள்** வர்த்தக, அரசியல் இடர்கள் காரணமாக கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள முடியாமை, தாமதமாகப் பெறவேண்டி நேர்தல் ஆகிய இடர்களுக்கு எதிராக ஏற்றுமதியாளருக்குக் காப்பளிக்கின்றது. மொத்த இழப்பில் 80 – 85 சத வீதமானவற்றுக்குக் காப்புறுதி வழங்கப்படுகின்றது. இவற்றால் நன்கு நிறுவப்பட்ட நிறுவனங்கள் மட்டுமின்றிப் புதியவர்களும் தமது ஏற்றுமதிகளை விரிவு படுத்த முடிகின்றது.

இக் கூட்டுத்தாபனம் வங்கி உத்தரவாதத் திட்டத்தின் கீழ் ஏற்றுமதியாளர் சார்பில் வர்த்தக வங்கிகட்கு மூன்று வகையான உத்தரவாதங்களை வழங்கி வருகின்றது. அவையாவன:-

1. கப்பல் ஏற்றுகைக்கு முன்னுன உத்தரவாதம்
2. கப்பல் ஏற்றுகைக்குப் பின்னுன உத்தரவாதம்
3. ஏற்றுமதிச் செயலாற்ற உத்தரவாதம்

1986இன் ஈற்றில் நடைமுறையில் இருந்த உத்தரவாதங்களின் எண்ணிக்கை 537 ஆகும். அதன் பெறுமதி 1,202 மில்லியன் ரூபாயாகும்.

ஏற்றுமதிக்கான உற்பத்தியைக் கிராமிய மட்டத்தில் மேற்கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமே ஏற்றுமதி உற்பத்திக் கிராமத் திட்டமாகும். 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தில் வகை செய்யப்பட்ட மக்கள் கம்பனிகளாக ஏற்றுமதிக் கிராமங்கள் பதிவு பெறுகின்றன. இவற்றின் முக்கிய குறிக்கோளாவன:-

1. ஏற்றுமதி மூலங் கிட்டும் நலன்களை நேரடியாகவே கிராமங்களுக்குக் கிடைக்கச் செய்தல்.
2. கிராமிய மட்டத்தில் புதிய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி அதன் மூலம் கிராமிய மட்டத்தில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலும் சேமிப்புகளைத் தூண்டுதலும்.
3. தற்போதய ஏற்றுமதிகளை அதிகரித்தலும் கிராமிய அடிப்படையிலான உற்பத்திகளை மேற்கொள்ளக் கூடிய ஒரு வர்க்கத்தினரை உருவாக்குதலும்.
4. ஏற்றுமதி செய்யக் கூடிய கிராமிய உற்பத்திகளுக்குத் தொடர்ச்சியாகச் சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல். அத்துடன் உற்பத்தியாளருக்கு நியாயமான விலையைப் பெற்றுக் கொடுத்தல்.
5. கிராமிய உற்பத்தியாளர் மத்தியில் தொழிற்திறமை, தரமான உற்பத்திகளை மேற்கொள்ளல் என்பது பற்றிய தெளிவான உணர்வினை ஏற்படுத்தி சிறந்த உற்பத்தியாளர்களாக அவர்களை மாற்றுதல்.

தம்பதெனியா ஏற்றுமதி உற்பத்திக் கிராமமே முதன் முதலாகத் தோற்றுவிக்கப்பட்ட கிராமமாகும். ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இவற்றின் தொழிற்பாடுகளில் மிக நெருக்கமாகப் பங்கு கொள்கின்றது. ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் அதே நேரத்தில் கிராம மக்களின் நலனை மேம்பாடுறச் செய்யும் செயன்முறையாக இது விளங்கி வருகின்றது.

**நிவாரணங்கள்**

ஏற்றுமதியாளருக்கு அரசாங்கம் பல்வேறு நிவாரணங்களை வழங்கி வருகின்றது. **சுங்கத் தீர்வைத் தள்ளுபடித் திட்டம்** இவற்றின் ஒன்றாகும். இத் திட்டத்தின் கீழ் மரபு வழியல்லாத ஏற்றுமதிகளின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள், பொதியிடற் பொருட்கள் என்பவற்றின் மீது செலுத்தப்படும் இறக்குமதித் தீர்வைகளும், மொத்த விற்பனவு வரியும், பொருட்கள் ஏற்றுமதியாகுந் தருணத்தில் மீளளிக்கப்படுகின்றன. 1985இல் 298 பொருட்களும் 1986இல் 323 பொருட்களும் இவ்வாறான தள்ளுபடி பெறும் அருகதையைப் பெற்றிருந்தன.

ஏற்றுமதியாளரின் தீர்வைத் தள்ளுபடிக் கோரல் கொடுப்பனவுகளைத் தாமதமின்றித் தீர்ப்பதற்காக 1987 மார்ச் மாதத்தில் மத்திய வங்கி தனது வங்கித் தொழில் திணைக்களத்தில் இறக்குமதித் தீர்வைத் தள்ளுபடிப் பிரிவு ஒன்றினை ஏற்படுத்தியது. இத் திட்டத்தின்படி ஏற்றுமதியாளர்களின் தீர்வைத் தள்ளுபடிக் கோரல்கள் அவர்களது சொந்த வங்கிகளால் தீர்த்து வைக்கப்படும்.

சுங்கத் தீர்வைத் தள்ளுபடித் திட்டத்துக்குப் பதிலீடான **தயாரிப்பு வரை களஞ்சியத்திலிருந்து திட்டமும்** (Manufacture-in-bond Scheme) செயற்படுத்

தப்பட்டு வருகின்றது. இத் திட்டத்தின்படி ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்வோர், அவ்வுற்பத்திக்குத் தேவையான உள்ளீடுகளை இறக்குமதி செய்யும்போது அவற்றுக்கான இறக்குமதித் தீர்வைகளையும், மொத்த விற்பனவு வரியையும் இறக்குமதி செய்யும்போது செலுத்தத் தேவையில்லை. ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் விதந்துரைப்பைப் பெற்றுத் தீர்வைகளைச் செலுத்தாமலே தமது களஞ்சியங்கட்கு அவற்றை அப்புறப்படுத்தலாம். 1986இல் இத்தகைய 50 நிறுவனங்கட்கு 52 சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

ஆரம்பத்தில் ஏற்றுமதி அபிவிருத்திக் கொடை வழங்கீட்டுத் திட்டம் (Export Development Grants Scheme) பின்னர் அபிவிருத்தி முதலீட்டு ஆதரவுத் திட்டமாக (Export Development and Investment Support Scheme) வடிவமைப்புச் செய்யப்பட்டது. மரபு வழியற்ற ஏற்றுமதிகளின் சந்தை மேம்பாட்டுக்கும், உற்பத்தியை அதிகரிப்பதற்கும் இத் திட்டத்தின்கீழ் உதவி வழங்கப்படுகின்றது. ஏற்றுமதியாளர் தனது முன்னைய சாதனையை விஞ்சுவாரேயானால் அவரது ஏற்றுமதிகளின் பெறுமதியின் குறித்த விகிதாசாரம் அவர்கட்குக் கொடையாக வழங்கப்படும். ஏற்றுமதியால் ஈட்டப்படும் அந்நியச் செலாவாணியை அடிப்படையாகக் கொண்ட இக் கொடையின் 25 சதவீதம் பணமாகவும் எஞ்சியவை அபிவிருத்திச் சான்றிதழாகவும் வழங்கப்படும். 1985இன் செயலாற்றலுக்காக இத் திட்டத்தின் கீழ் 1986இல் 47.6 மில்லியன் ரூபாய் காசுக் கொடுப்பனவும் 65.4 மில்லியன் ரூபாய் பெறுமதியான அபிவிருத்தி முதலீட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இவற்றைவிட ஏற்றுமதித் தீர்வையில் சலுகை அளிப்பும் வழங்கப்படுகின்றது. உதாரணமாக 1987இல் சகல சிறு வேளாண்மை உற்பத்திகள், கடலுற்பத்திகள் மீதான ஏற்றுமதித் தீர்வைகள் முற்றாக ஒழிக்கப்பட்டன. தொகை வடிவிலான தேயிலைக்கும், உறையிலிடப்பட்ட தேயிலைக்கும் விதிக்கப்பட்ட தீர்வை கிலோகிராமுக்கு ரூபா 1.50 குறைக்கப்பட்டது. அத்துடன் உரிமம் (Licence) பெறாமலேயே கடலுற்பத்திகள், மரக்கறிகள், இறைச்சி கருவா, முந்திரிப் பருப்புப் போன்ற பொருட்களை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டது.

ஏற்றுமதிகட்கு வரிவிடுப்பும் (Tax Holiday) வழங்கப்பட்டு வருகின்றது. ஏற்றுமதிக் கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டில் இருந்தே வரி விடுப்புக் காலம் கணிக்கப்பட்டு வந்தது. 1987ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்படி இது கைத்தொழில் இலாபமீட்டும் ஆண்டிலிருந்து கணிக்கப்படுகின்றது. ஏற்றுமதி வருவாயில் 50 சத வீதம் அந்நியச் செலாவணியாக ஈட்டப்படுமாயின் அக் கைத்தொழிலுக்கு வரி விடுப்புக் காலம் முடிந்த பின்னர் அடுத்து வரும் 5 ஆண்டுகட்கு அரை வரி விடுப்பு (Half Tax Holiday) வழங்கப்படுகின்றது. அத்துடன் ஏற்றுமதியாளருக்கு பொருட்களை வழங்குவோருக்கும் தற்போது வரிச் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

**ஊக்குவிப்புகள்**

ஏற்றுமதியாளருக்குப் பல்வேறு ஊக்குவிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் சில இக் கட்டுரையின் முன்னைய பகுதிகளில் விளக்கப்பட்டுள்ளன. இவற்றை விட 1981இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஜனாதிபதி ஏற்றுமதி விருதுத் திட்டம் (Presidential Export Awards Scheme) குறிப்பிடத்தக்கதாகும். இத் திட்டத்தின் கீழ் மரபு ரீதியற்ற புதிய பொருட்களை ஏற்றுமதி செய்வோரில் சிறந்தோர் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றனர். விருது பெறுவோர் அடையும் நலன்களாவன :–

1. ஒரு லட்சம் ரூபா ரொக்கப்பணம்.
2. சான்றிதழ்
3. விருது பெற்றமையைத் தமது விளம்பரங்களில் மூன்றாண்டுகட்கு பிரச்சாரம் செய்யும் தகைமை.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும், இலங்கை வணிக சம்மேளனமும் இணைந்து விருதுக்கு உரியவர்களைத் தெரிவு செய்கின்றனர். புதிய ஏற்றுமதியாளர் இதனால் ஊக்கப்படுத்தப்படுகின்றனர். ஏற்றுமதித் துறையை விரிவாக்கஞ் செய்யவும் இத் திட்டம் உதவுகின்றது.

1981இலிருந்து வருடா வருடம் பல நிறுவனங்களும், தனியாரும் இவ்வாறு விருதுகளைப் பெற்றுள்ளனர். ஏற்றுமதிக் கிராமிய கம்பனிகள், கூட்டுத்தாபனங்கள், தனிக் கம்பனிகள் ஆகியோரும் விருதுகளைப் பெற்றுள்ளனர். ஏற்றுமதிகட்காகப் பொதியிடற் பொருட்களை உற்பத்தி செய்வோரும் இத் திட்டத்தின் கீழ் விருதுகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

முடிவுரை

ஏற்றுமதிகளை ஊக்குவிக்க அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது. இதன் விளைவாக ஏற்றுமதி வருவாய் பெருமளவு அதிகரித்துள்ளன. எனினும் பெருந்தோட்டப் பயிர்த்துறை போதியளவு வளர்ச்சி பெறவில்லை. இத்துறையின்

ஏற்றுமதி வருமானம் 1978 – 86 இடைப்பட்ட காலப் பகுதியில் 450 – 500 மில்லியன் (சிஎஉ) மட்டத்திலேயே தொடர்ந்தும் அமைந்துள்ளது. மறுபுறத்தில் கைத்தொழில் ஏற்றுமதிகளுள் ஆடைகள் கைத்தொழிலும், பெற்ரோலிய உற்பத்திகளுமே அதிக விரிவாக்கம் கண்டுள்ளன. இவை இறக்குமதி செய்யப்படும் உள்ளீடுகளைப் பெருமளவில் பயன்படுத்துவனவாகும். 1987 – 87 காலப்பகுதியில் கைத்தொழில் ஏற்றுமதி வருவாய் ஆறுமடங்கு அதிகரித்த போதிலும் இவற்ருல் கிட்டிய அந்நியச் செலாவணிச் சம்பாத்தியம் மிகவும் குறைவானதே. இந்த அடிப்படையில் நோக்கும்போது ஏற்றுமதி அமைப்பில் அடிப்படை மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதெனக் கூற முடியாது. இன்றுகூட நிகர அந்நியச் செலாவணிச் சம்பாத்தியத்தில் மூன்றில் இரண்டு பங்கு வேளாண் பொருட்களின் ஏற்றுமதியிலிருந்தே கிடைக்கின்றது.

ஏற்றுமதி வருமானம் அதிகரித்துள்ள போதிலும் அதனுல் ஈட்டப்படும் அந்நியச் செலாவணியிலிருந்து இறக்குமதிகளை நிதியீட்டஞ் செய்யக்கூடிய விகிதம் உண்மையில் குறைவடைந்தேயுள்ளது. 1977 – 86 காலப் பகுதியில் ஏற்றுமதிகள் சராசரியாக 5 சத வீதத்தால் அதிகரித்திருக்க இறக்குமதிகள் 11 சத வீதத்தால் அதிகரித்தன. எனவே ஏற்றுமதி வருமானத்தில் இறக்குமதிச் செலவின் 60 சத வீதத்தை மட்டுமே நிதியீட்டஞ் செய்யக் கூடிய நிலையே காணப்படுகின்றது.

இந் நிலையில் அரசாங்கக் கொள்கையில் மாற்றம் ஏற்படுத்துவது அவசியமாகின்றது. ஊழியச் செறிவுள்ள ஏற்றுமதித் துறையும் மூலதனச் செறிவுள்ள இறக்குமதிப் பிரதியீட்டுக் கைத்தொழிற் துறையும் ஒருங்கு சேர வளர்த்தெடுக்கப்பட்டால் மட்டுமே எமது பொருளாதாரத்தில் நிலவும் அடிப்படைச் சமமின்மைகளை எம்மால் வெற்றிகரமாக எதிர்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

## புதிய ஏற்றுமதிப் பொருள்

நீண்ட நாட்களாகவே மூக்குக் கண்ணுடிச் சட்டங்கள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வந்துள்ளன. அண்மையில் தென் கொரியாவுக்கு உலோகத்திலுலான மூக்குக் கண்ணுடிச் சட்டங்கள் ஏ ற் று ம தி செய்யப்பட்டன. இலங்கையின் முன்னணி மூக்குக் கண்ணுடி நிறுவனமான அல்பேர்ட் எதிரிசிங்க லிமிட்டட் தென்கொரிய கம்பனி ஒன்றுடன் கூட்டுச் சேர்ந்து அல்பேர்ட் எதிரிசிங்க – சொங்டோ (தனி) லிமிட்டட் (Albert Edirisinghe Songdoh (Pvt) Ltd.) என்ற நிறுவனத்தை அமைத்துள்ளது. இந் நிறுவனத்தாலேயே இக் கண்ணுடிச் சட்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதற்கென இக் கம்பனியின் ஊழியர்களில் அறுவர் தென் கொரியாவில் பயிற்றப்பட்டும் உள்ளனர். உள்ளூர் மூலப் பொருட்களைக் கொண்டே இச் சட்டங்களின் உலோகப் பகுதிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பிளாஸ்டிக் பகுதிகளுக்குத் தேவையான மூலப் பொருட்கள் மட்டுமே இறக்குமதி செய்யப்படுகின்றன. ஒரு மில்லியன் பெறுமதியான சட்டங்களை நாள் தோறும் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. பாரம்பரியமற்ற ஏற்றுமதியாகையால் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும் இக் கம்பனியின் ஒப்புரவு மூலதனத்தில் பங்கேற்றுள்ளது. இச் சபையும் உள்ளூர்ப் பங்காளரும் இணைந்து இக் கம்பனியின் செலுத்தப்பட்ட மூலதனத்துக்கு 51 சதவீதப் பங்களிப்பை வழங்கியுள்ளனர். அந்நிய முதலீட்டாளர் இயந்திர சாதனங்கள், நுட்ப ஆற்றல் என்பவற்றைப் பிரதானமாக வழங்கி அதன் மூலதனத்துக்கு 49 சதவீதப் பங்களிப்பைச் செய்துள்ளனர்.

# பிரசுரிக்கப்படுங் கணக்குகளில் வெளிப்படுத்த வேண்டிய தகவல்கள் பற்றிய ஒரு நோக்கு

# INFORMATION TO BE DISCLOSED IN PUBLISHED ACCOUNTS - A VIEW

வி. அரியரத்தினம், A. C. A. (Cey.)
சி. யோகேஸ்வரன், B. A. (Cey.)

## அறிமுகம்

பல்வேறு வகையான வியாபார அமைப்புக்களில் தனக்கெனத் தனியான ஆளுமை கொண்ட கம்பனிகள் சிறப்பு அம்சங்கள் பலவற்றைக் கொண்டனவாகும். அவற்றுள் ஒன்று கம்பனிகளின் உடைமை அதன் முகாமையிலிருந்து வேறுபட்டதாக அமைந்திருத்தலாகும். கம்பனியின் பங்குகளை உடைமை கொண்டுள்ளோர் அநேகராக இருப்பர். அவர்கள் யாவரும் அதன் நாளாந்த முகாமையில் பங்கு கொள்ள எத்தனிப்பரேயானுல் குழப்பமுங் குளறுபடியுமே எஞ்சும். இதனுல் கம்பனியின் முகாமைப் பணி வேருெரு சாராரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர்கள் கம்பனியின் பங்குகளின் ஒரு தொகுதியை உடைமை கொண்டவராகவோ அல்லாதவராகவோ கூட இருக்கலாம். தொழில் முறையில் முகாமைப் பணியை மேற்கொள்பவர்கள் கம்பனியை முகாமை செய்தலுங்கூடும். இவ்வாறு உடைமையும், முகாமையும் ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிக்கப்பட்டிருப்பதனுல் உடமையாளருக்குப் பயன்படத்தக்க பல்வேறு விபரங்களை உள்ளடக்கியவையாகக் கம்பனிக் கணக்குகள் அமைந்திருத்தல் வேண்டும். அத்துடன் கம்பனியை முகாமை செய்வோர் கம்பனியின் நம்பிக்கைப் பொறுப்பாளராக இருப்பதனுலும் பிரசுரிக்கப்படுங் கணக்குகளில் பல்வேறு தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகின்றது. பொதுக் கம்பனிகளின் பங்குகளைக் குடிமக்கள் எவருங் கொள்வனவு செய்யலாம். இவ்வாறு கொள்வனவு செய்யுங் குடிமகன் ஒருவர் தனது பணத்தை அக் கம்பனியில் முதலீடு செய்பவர் ஆகின்ருர். எனவே முதலீடு செய்வது பற்றி அவர் தீர்மானம் ஒன்றினை மேற்கொள்வதற்கு அவருக்குத் தேவையான தகவல்கள் பிரசுரிக்கப்படுங் கணக்குகளில் வெளிப்படுத்தப்படுதல் அவசியமானதே. மேலுங் கம்பனிக்குள் கடன்களை வழங்க முன்வருவோர், குறிப்பாக வங்கிகளும், நிதி நிறுவனங்களும் கம்பனிகளின் நிதி நிலை பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வங் காட்டும். அதே போலக் கம்பனியிடம் கடன் பெற்றுக் கொள்பவருக்கும் இந்த அறிவு அவசியமானதாகின்றது. மறுபுறத்தில் கம்பனியின் செயற்பாடு பற்றிச் சில தகவல்கள் அரசாங்கத்துக்குத் தேவைப்படும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் கம்பனியின் விற்பனைப் புரள்வு, இலாபம் என்பவை பற்றி அக்கறை கொண்டவராக இருப்பார். சில நாடுகளில் கம்பனியின் ஊழியரும் கம்பனியின் நிலவரம் பற்றி அறிந்து கொள்வதில் நாட்டங் காட்டி வருகின்றனர். குறிப்பாக இங்கிலாந்தில் ஊழியருக்குத் தேவையான சில தகவல்கள் வேருகத் தயாரிக்கப்பட்டு வெளிப்படுத்தப்படல் வேண்டும் என்ற தேவைப்பாடு உள்ளது. இவ்வாறு பல்வேறு காரணங்கள் கம்பனியின் செயற்பாடு பற்றிய பல்வேறு விபரங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டியதை அவசியமாக்குகின்றன.

1982 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தில் பிரசுரிக்கப்படுங் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டிய தகவல்கள் பற்றி ஆங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைவிடக் கணக்கியற் தொழிலை நெறிப்படுத்துவதற்காக வகுக்கப்பட்ட இலங்கை கணக்கியல் நியமங்களும் இவ்வாறு வெளிப்படுத்தப்பட வேண்டிய தகவல்களைப் பற்றி விபரித்துரைக்கின்றது. இவற்றை விடக் கணக்கியலைத் தொழின் முறையாக மேற்கொள்பவர்களால் உருவாக்கப்பட்ட நல் வழமைகளும் சில தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதைத் தேவைப்படுத்துகின்றன.

இவ்வாறு சட்டம், நியமங்கள், வழமைகள் ஆகியவற்றின் தேவைப்பாடுகளைத் தொகுத்துப் பிரசுரிக்கப்படுங் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டிய தகவல்கள் பற்றிய அனைத்தும் அடக்கிய நோக்காக இக் கட்டுரை ஆக்கப்பட்டுள்ளது. விரிவஞ்சி இக் கட்டுரை பல பாகங்களாகப் பிரசுரிக்கப்படும். இப் பகுதியில், பிரசுரிக்கப்பட வேண்டிய கணக்குகள் யாவை என வரையறுக்கப்படுகின்றது. அவற்றைத் தயாரிப்பதில் கைக்கொள்ள வேண்டிய கோட்பாடு

கள், கொள்கைகள் என்பவை பற்றிக் கூறப்படுகின்றது. மேலும், இவற்றில் மாற்றங்கள் செய்யப்படுமிடத்து கம்பனிகள் சட்டத்தின் படியும் கணக்கியல் நியமங்களில் விதிக்கப்பட்டுள்ளவாறும் நிறைவு செய்யப்பட வேண்டிய விதி முறைகள் குறித்தும் விபரிக்கப்படுகின்றது.

### வரைவிலக்கணம்

ஒரு கம்பனியின் கணக்குகள் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி யிருத்தல் வேண்டுமென 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் 145ஆம் பிரிவு வரையறுத்துக் கூறியுள்ளது. அதே போல ஒன்பதாம் இலக்க இலங்கைக் கணக்கியல் நியமமும் சிலவற்றைத் தேவைப்படுத்துகின்றது இவற்றின்படி நிதிக் கூற்றுக்கள் பின்வருவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

1. ஐந்தொகை
2. இலாப நட்டக் கணக்கு
3. நிதி வளம், பயன்பாடு பற்றிய கூற்று (நிதிப் பாய்ச்சல் கூற்று) (Statement of Sources & application of funds)
4. ஐந்தொகை, இலாப நட்டக் கணக்கு ஆகியவற்றில் சேர்க்கப்படுங் குறிப்புகள்.
5. கம்பனிகள் சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட தகவல்களை வெளிப்படுத்துவதற்காக மேற்கூறியவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள ஏனைய ஆவணங்கள்.

கம்பனிச் சட்டத்தின் (7ஆம் பிரிவின் 3ஆம் உட்பிரிவின்) படி கம்பனியின் கணக்கேடுகளுடனும் ஏனைய கணக்கியற் பதிவுகளுடனும் ஒத்துப்போகும் விதத்திலேயே அதன் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இந் நிலையில் கணக்கியற் பதிவுகள் என்றால் என்ன என்பதை விளக்குதல் அவசியமாகின்றது. தன்னால் மேற்கொள்ளப்படும் சகல கொடுக்கல் வாங்கல்களையும் பதிவு செய்யக் கூடியதாக ஒவ்வொரு கம்பனியும் முறையான ஏடுகளைப் பேணி வருதல் அவசியமானதாகும். 1982ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டம் (பிரிவு 143 : உட்பிரிவு 1) இக் கொடுக்கல் வாங்கல்களைப் பின்வருமாறு வகுக்கின்றது:

1. சகல பண வரவுகளும் கொடுக்குமதிகளும்.
2. அனைத்துப் பொருட்களதுங் கொள்வனவும் விற்பனவும்.
3. சகல சொத்துக்களும் பொறுப்புகளும்

மேலும் கம்பனியானது தனது உண்மையானதும் நேர்மையானதுமான நிலையைக் காட்டக்கூடிய சகல ஏடுகளையும், பதிவுகளையும் பேணி வருதல் அவசியம். அத்துடன் தனது கொடுக்கல் வாங்கல்களை அது விளக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

ஏழாம் இலக்கக் கணக்கியல் நியமத்தின்படி கணக்குகள் பற்றிய உண்மையானதும் நேர்மையானதுமான கருத்து வெளிப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு வெளிப்படுத்தப்படுங் கணக்குகள் கீழ்க் கண்டவற்றை உள்ளடக்கியவையாகவும் இருத்தல் வேண்டும்:

1. தொழில் முயற்சியின் பெயரும் அதன் சட்ட முறையான அமைப்பும் (கம்பனியானது தனியார் கம்பனியாகவோ, மக்கள் கம்பனியாகவோ, பொதுக் கம்பனியாகவோ இருக்கலாம். அதன் பொறுப்பு பங்குகளால் அல்லது உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்டும் இருக்கலாம். இவற்றுள் எவ் வகையை அக் கம்பனி சார்ந்தது என்ற விபரம் இதன் கீழ் விபரிக்கப்படல் வேண்டும்.)
   (உ+ம்: சாவகச்சேரி பனம் பொருள் உற்பத்தி [மக்கள்] கம்பனி லிமிற்றட்; அல்லது திபம் (தனி) லிமிற்றட்: அல்லது கொழும்பு ஆவண மாற்று (உத்தரவாத) லிமிற்றட்.)
2. கம்பனி கூட்டிணைக்கப்பட்ட நாட்டின் பெயர் (உ+ம்; இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டது அல்லது ஐக்கிய ராச்சியத்திற் கூட்டிணைக்கப்பட்டது.)
3. ஐந்தொகைத் திகதி (உ+ம்: 86-12-31ஆம் திகதியிலான ஐந்தொகை.)
4. நிதியறிக்கை செய்யப்படுங் காலம் (உ+ம்: 86-01-01 முதல் 86-12-31 ஆந் திகதி வரையிலான காலத்துக்குரிய இலாப நட்டக் கணக்கு.)
5. முயற்சியின் நடவடிக்கைகளின் தன்மை பற்றிய சுருக்க விவரணம் (உ+ம்: உள்நாட்டு விளைபொருள் முகவரும், ஏற்றுமதியாளரும்)
6. நிதிக் கூற்றுக்கள் விபரிக்கப்படும் நாணய அலகு (உ+ம்: இலங்கை ரூபாய் அல்லது ஐக்கிய ராச்சிய பவுண்ட்)

### கணக்கியல் எடுகோள்களும் கொள்கைகளும்

கணக்கறிக்கைகள் தயாரிக்கப்படும்போது அவை சில அடிப்படை எடுகோள்களைக் கருத்திற் கொண்டு தயாரிக்கப்படுதல் அவசியமாகும். அவ் எடுகோள்களாவன:-

1. அட்டுறு எடுகோள் (accrual)
2. நிலைப்பாட்டு எடுகோள் (consistency)
3. தொடர்ந்து இயங்கும் எடுகோள் (going concern)

இந்த எடுகோள்கள் யாவற்றையும் கருத்திற் கொண்டே கணக்கறிக்கைகள் தயாரிக்கப்பட்டன எனச் சான்றளிக்க வேண்டிய தேவைப்பாடு முன்னர் காணப்பட்டது. ஆனல் தற்போது இவ்வாறு சான்றளிக்க வேண்டிய அவசியம் இல்லை. இவற்றைக் கருத்திற் கொண்டே கணக்கறிக்கைகள் தயாரிக்கப் பட்டன எனத் தற்போது அனுமானிக்கப்படுகின்றது. எனினும் ஏதாவது காரணத்தால் இந்த அடிப்படை எடுகோள்களில் ஒன்றோ அல்லது பலவோ பின்பற்றுது விடப்பட்டவுங் கூடும். இத்தகைய வேளைகளில் இந்த உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் அதற்கான காரணங்கள் விபரிக்கப்படுதலும் வேண்டும்.

கணக்கறிக்கையைத் தயாரிப்பதில் பல்வேறு கணக்கியற் கொள்கைகள் கைக்கொள்ளப்பட்டிருக்கும். அவற்றுட் பிரதானமானவை நிதிக் கூற்றுக்களின் முக்கிய பகுதியாகத் தெளிவாகவுஞ் சுருக்கமாகவும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

சில சமயங்களில் கணக்கறிக்கையில் ஏதாவது ஒரு அம்சம் தவறுகவோ அல்லது முறையற்ற விதத்திலோ தயாரிக்கப்பட் டிருக்கலாம். அவ்வாறு நேர்ந்திருந்தால் தாம் கையாண்ட கணக்கியற் கொள்கையை வெளிப்படுத்துவதன் மூலம் இத் தவற்றை நிவர்த்தி செய்துவிட முடியாது. குறிப்புகளைத் தருவதன் மூலமோ ஏனைய வகையான விளக்கங்களை அளிப்பதன் மூலமோ இத்தகைய தவறுகள் நிவர்த்திக்கப்படுவதில்லை. எனவே கைக்கொள்ளப்பட்ட பிரதான கணக்கியற் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட வேண்டியது மூன்றும் இலக்க கணக்கியல் நியமத்தின் தேவைப்பாடாக இருந்த போதிலும், இவ்வாறு வெளிப்படுத்துவதன் வாயிலாகத் தவறுகளை நிவர்த்தி செய்தலை இந் நியமம் அனுமதிக்கவில்லை எனலாம்.

நிதிக் கூற்றுக்களில் பிரசுரிக்கப்படும் ஒவ்வொரு அம்சத்துக்கும் எதிராகவும் முன்னைய காலப்பகுதிக்கான எந்த அம்சத்தின் கணக்கு விபரங்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும் என்பது மூன்றும் இலக்க நியமத்தின் தேவைப்பாடாகும். கம்பனிகள் சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையும் இத் தேவையை விதித்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். உதாரணமாக 1987ஆம் ஆண்டுக்குரிய நிதிக் கூற்றுக்களில் ஒவ்வொரு அம்சத்துக்கும் நேராக அதற்கு முந்தைய காலப் பகுதிக்குரிய விபரங்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். இத் தேவைப்பாட்டின் விளைவாக முந்தைய ஆண்டுச் செயற்பாடுகளை நடப்பாண்டுச் சாதனைகளுடன் ஒப்பீடு செய்வதற்கு நிதிக் கூற்றுகளைப் பயன்படுத்துவோருக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தரப்படுகின்றது.

சில சமயங்களில் கம்பனி ஒன்று, இதுவரை கைக்கொள்ளப்பட்டு வந்த கணக்கியற் கொள்கை ஒன்றினைக் கைவிட்டு, பிறிதொன்றினைப் பின்பற்றியிருக்கக்கூடும். இக் கொள்கை மாற்றத்தால் நடப்புக் காலப் பகுதியிலோ அல்லது எதிர்வருங் காலப் பகுதிகளிலோ பாதிப்புறு மாற்றங்கள் விளையவுங் கூடும். எனவே மாற்றஞ் செய்யப்படும் ஒவ்வொரு வேளையிலும் அவ்வுண்மை வெளிப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அதற்கான காரணங்களுந் தெரிவிக்கப்படல் வேண்டுமென மூன்றும் இலக்கக் கணக்கியல் நியமம் விதித்துள்ளது. உதாரணமாக, இதுகால வரையும் பெறுமானத் தேய்வு ஒடுங்கு பாக முறையில் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள தெனவும் நடப்பாண்டில் கணக்கியற் கொள்கை மாற்றத்தால் நேர்க் கோட்டு முறையில் பெறுமானத் தேய்வு கணிக்கப்பட்டுள்ளது என்றுங் கொள்வோம். கொள்கை மாற்றம் பற்றிய உண்மை வெளிப்படுத் படுத்தப்படாவிட்டால் சொத்துக்களின் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களை நிதிக் கூற்றுக்களைப் பயன்படுத்துவோரால் பூரணமாக விளங்கிக் கொள்ள இயலாது போய்விடும். இதனைக் கருத்திற் கொண்டே மூன்றும் இலக்கக் கணக்கியல் நியமம் இத் தேவைப்பாட்டை விதித்துள்ளது மேலும் கொள்கை மாற்றத்தால் ஏற்பட்டுள்ள விளைவு பாரியதாக இருக்குமிடத்து அது வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் மாற்றத்தின் தொகையுங் குறிப்பாகக் காட்டப்படுதலும் வேண்டும் என்று நியமத்தின் 24ஆம் பிரிவில் விதிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு தொழில்கட்குப் பொருத்தமான இருபது கணக்கியற் கொள்கைகளை இந் நியமம் பட்டியலிட்டுக் காட்டியுள்ளது. இவற்றுள் குறித்த தொழில் முயற்சிக்குச் சிறப்பாகப் பொருந்தக் கூடிய கொள்கைகளைப் பயன்படுத்திக் கம்பனியானது தனது நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கலாம். ஆனல், தான் பயன்படுத்திய கணக்கியற் கொள்கைகளைக் கம்பனி வெளிப்படுத்தல் வேண்டும்.

சில சமயங்களில் பொருத்தமான நியமங்கட்கு வேறுபட்ட விதத்தில் கணக்கறிக்கைகள் தயாரிக்கப் பட்டிருத்தல் [illegible]ம். இத்தகைய விலகல்கள் வெளிப்படுத்தப்படுவதுடன் விலக்கப்படவும் வேண்டும்.

வெளி மாவட்டங்களில் "வணிக மஞ்சரி" கிடைக்குமிடம் :-

- 'கவிதாஸ்', பஸ் நிலையம், வவுனியா.
- டானியல்ஸ் புத்தக நிலையம், 287, காலி வீதி, வெள்ளவத்தை.
- வி. அருந்தவன் ஸ்டோர்ஸ், 10, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு - 13.
- அன்சாரி புத்தக நிலையம், 106, ஆர்மர் வீதி, கொழும்பு - 12.
- எஸ். ஜீவன், பிரிலியன்ற் இன்ஸ்ரிருயிற், டொலவத்த, மாத்தளை.
- கலைவாணி புத்தக நிலையம், 130, டீ. எஸ். சேனநாயக்க வீதி, கண்டி.
- லங்கா புத்தக நிலையம், கொழும்பு வீதி, கண்டி.
- கிருஷ்ணா புத்தக நிலையம், அருளப்பு கட்டிடம், பிரதான வீதி, முல்லைத்தீவு.
- பிற்றபான், S-23, இரண்டாம் மாடி, கொழும்பு சென்றல் மாக்கற் கொம்பிளக்ஸ், கொழும்பு-11

---

வணிக மஞ்சரி வெளியீடுகள்

★ **வங்கியியல் சட்டங்களும் நடைமுறைகளும் — ரூபா 60/-**
— துரைசிங்கம் ரகு A. I. B. (Cey.)

★ **தேசிய வருமானம் — ரூபா 20/-**
— மா. சின்னத்தம்பி B. A., B. Phil. (Hons.)

★ **இலங்கையின் பணச் சந்தையமைப்பு — ரூபா 10/-**
— கு. கல்வனைசேயோன்

★ நடைமுறை வணிகம் — I
**போக்குவரத்தும் தொடர்பாடலும் — ரூபா 17-50**
— சி. [illegible]. ராதாகிருஷ்ணன் B. Com. (Cey.)
— கு. கல்வனைசேயோன்

# சிற்றி மெடிக்கல்ஸ்

487, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**விநியோக முகவர்கள்:-**

சிலோன் நியூட்ரிஷனல் பூட்ஸ் லிமிட்டெட்
மல்லர் அன் பிலிப்ஸ் (சிலோன்) லிமிட்டெட்
ஹொச்சேஸ்ட் (சிலோன்) லிமிட்டெட்
அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்
வித் இன்ரநாஷனல் லிமிட்டெட்
பைஷர் லிமிட்டெட்

---

மொத்த சில்லறைக் கொள்வனவுகளிற்கு
நம்பிக்கை மிகுந்த ஸ்தாபனம்

# கணேசன் ரேடிங் கம்பனி

கந்தசாமி கோவில் சந்தி,
இணுவில்.


Mahathma Printing Works, Earlalai.